பக்கங்கள்-16 சித்திரை 27,2014 விலை-30.00




# தினப்புயல்

நடுநிலை இதழ்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885 Email:tthinappuyalnews@yahoo.com, www.thinappuyal news.com இதழ் - 82



## ஆனந்தபுரத்தில் பிரபாகரனின் மற்றுமொரு பதுங்கு குழி கண்டுபிடிப்பு - அச்சத்தில் அரசு

## இலங்கையரசிற்கு பொருளாதாரத் தடை விதிக்கப்படுமா?

## தமிழ் மக்கள் மீதான சர்வதேச விசாரணையின் நிலைப்பாடு










# ஆனந்தபுரத்தில் பிரபாகரனின் பதுங்கு குழி கண்டுபிடிப்பு - அரசு அச்சத்தில்

நாட்டில் சமாதான சூழல் காணப்படுகின்ற இந்நிலையில் மீளவும் போரின் பரிணாமங்கள் வளர்ச்சி கண்டுள்ளன என்றே கூறவேண்டும். ஏற்கனவே விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாளர்கள் மூவர் நெடுங்கேணிக் காட்டில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் கோத்தபாய ராஜபக்ஷவின் திட்டமிட்ட சதி என்று கூறப்பட்டது. இதனையடுத்து புலிகளின் தலைவர் பிரபாகரன் மறைந்திருந்ததாகக் கூறப்படும் பதுங்கு குழி ஆனந்தபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.





விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் இருந்த காலகட்டத்தில் நூற்றுக்குமேற்பட்டதான நிலக்கீழ் சுரங்கப்பாதைகள், பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எமது தினப்புயல் பத்திரிகை முன்பு குறிப்பிட்டது போல, இந்த நிர்மானப்பணிகளில் இருந்தவர்கள் பலர் இன்று உயிருடன் இல்லை என்பதே உண்மைத்தன்மையாகும். இராணுவ ஆய்வாளர்களின் கருத்தின்படி, பிரபாகரனால் அமைக்கப்பட்ட பதுங்கு குழிகள் அனைத்திலும் ஒரு வருடத்திற்கு மேல் உயிர்வாழ முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறிருக்கின்ற நிலையில் பிரபாகரனின் நேரடி திட்டமிடலின் படியே இந்த பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. யுத்தம் நிறைவடைந்த பின்னரும் விடுதலைப்புலிகளின் பேச்சும், அவர்களது நடமாட்டங்கள், அவர்களின் புலனாய்வுகள் தொடர்பிலும் இலங்கையரசு இன்னமும் தமக்குள்ளே பல்வேறு கோணங்களில் சிந்தித்து, நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு அமெரிக்காவே காரணம் எனலாம். அமெரிக்காவைப் பொறுத்தவரையில் பிரபாகரனின் தலைமைத்துவம் அற்ற புலிகள் இயக்கத்தை அரசியல் மட்டத்தில் வளர்த்தெடுக்கவேண்டும் என்பதே. 200இற்கு மேற்பட்ட நாடுகளை உள்ளடக்கிய இந்த உலகில் தற்பொழுது 52 பயங்கரவாத அமைப்புக்கள் இருக்கின்றன. இவற்றின் பின்னணியாக அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் செயற்பட்டு வருகின்றன.

1987 – 1990ம் ஆண்டு காலப்பகுதிகளில் விடுதலைப்புலிகளை மட்டுமல்ல இலங்கையில் இருக்கக்கூடிய ஆயுதக்குழுக்களை வளர்த்து வந்ததும் இந்தியாவே எனலாம். இன்று நிலைமை மாற்றம் பெற்று இலங்கையின் போராட்டத்தின் மறுவடிவம் அமெரிக்கா பக்கம் திசைமாறியுள்ளது. இதை விடவும் அமெரிக்காவின் முக்கிய நோக்கங்கள் எனக்கருதுகின்றபொழுது, தனது தளங்களை சர்வதேச ரீதியாக பலப்படுத்துவதற்கு இலங்கைத் தீவு தேவைப்படுகின்றது. வர்த்தக பொருளாதாரத்தை மேம்படுத்துதல், உல்லாச விடுதிகளை அமைத்து அதனூடாக தனது பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ளல், பிராந்தியத்தில் உளவு நடவடிக்கைகளை இலகுவில் மேற்கொள்ளுதல் போன்றதும், மீண்டும் ஒரு பயங்கரவாதத்தை பிரபாகரனது தலைமைத்துவத்தில் அல்லாது விடுதலைப்புலிகள் அமைப்பை அரசியல் அமைப்பாக மாற்றி தமிழ் மக்களுக்கான உரிமைகளை மட்டுமல்ல இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களையும் ஜனநாயக ஆட்சிமுறைமைக்குள் கொண்டுவரும் செயற்பாடாகவே அமெரிக்கா ஒருபுறம் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது.

இதனை ஏன் அமெரிக்கா செய்கின்றது என்று பார்க்கின்றபொழுது, இந்த இலங்கைத்தீவை தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளில் ஏதாவது ஒன்றைப்போல பாலியல் கலாச்சாரம் நிறைந்த ஒரு நாடாக மாற்றுவதற்கான அடித்தளமேயாகும். இதற்காகவே அமெரிக்க அரசானது விடுதலைப்புலிகள் அங்கிருக்கிறார்கள், இங்கிருக்கிறார்கள் என்பதை காட்டிக்கொண்டிருக்கும் அதே வேளை நாடுகடந்த தமிழீழ அரசினையும் நியூயோர்க் நகரிலேயே நிறுவியுள்ளது.



இது இவ்வாறிருக்க, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மறைந்திருந்ததாகக் கூறப்படும் எத்தனையோ வீடுகள், பதுங்கு குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 05 வருடங்களுக்குப் பின் மீண்டும் பிரபாகரனினது வீடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது என்பது ஆச்சரியமானதும், அதிசயமானதுமாகும். 05 மாதத்திற்கு முன்னர் பிரபாகரனின் வீடு ஒன்று வன்னிக்காட்டுப்பகுதியில் இராணுவத்தினரால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டிருக்கின்றது.

அதன் பிற்பாடு சிறிய இடைவெளியின் பின் மீண்டும் ஒரு வீடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனந்தபுரம் பகுதியில் தான் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்திற்கும் கடும் சமர் இடம்பெற்றது. இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களும், 400 இற்கு மேற்பட்ட போராளிகளும் கொல்லப்பட்டனர். கிடைத்த தகவல்களின்படி அப்பகுதியில் தற்பொழுது துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக்கப்படுகின்றது. விடுதலைப்புலிகளின் தலைவரோ அல்லது ஏனையவர்களோ அப்பகுதியில் இருந்திருந்தால் கூட ஒரு வருடத்திற்குள் அனைவரும் இறந்திருக்கும் நிலை உருவாகியிருக்கும். ஆனால் அப்பகுதியில் இருந்த விடுதலைப்புலிகள் சர்வதேச நாடுகளுக்கு தப்பிச்சென்றதாகவும் தகவல்கள் தெரியவருகின்றது. ஆனால் எவ்வாறு சென்றார்கள்? என்பதுதான் இன்னமும் புரியாத புதிராக இருக்கின்றது.

தற்பொழுது உள்ள பிரச்சினை என்னவென்றால் இவ்வாறு விடுதலைப்புலிகளைப் பற்றி பரபரப்பாக பேசப்பட்டும் தலைவர் அங்கிருந்தார், இங்கிருந்தார், வரப்போகின்றார், என்றெல்லாம் சர்வதேசம் உசார்படுத்துகின்றதா? அல்லது இராணுவம் உசார்படுத்துகின்றதா? அல்லது விடுதலைப்புலிகள் மீண்டும் வருவார்களா? இதில் உண்மை எது? அல்லது நாடுகடந்த தமிழீழ அரசுதானா இவற்றை செய்விக்கின்றது. பிரபாகரனினால் உருவாக்கப்பட்ட மறைமுகமான பதுங்கு குழிகளில் குறைந்தபட்சம் 5000 பேர் வரை வாழக்கூடிய இட விஸ்தீரணத்தினைக் கொண்டு அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில், பிரபாகரனினுடைய தலைமைத்துவத்தினைப் போன்று இனி யொரு தலைமைத்துவம் உருவாவது என்பது கேள்விக்குறிய விடயம். முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவோ அல்லது ஏனைய இராணுவத்தலைவர்களோ பிரபாகரனுடைய போராட்டத்தை குறைவாகக் கூறவில்லை. அவர் ஒரு வீரன் என்றே கூறுகிறார்கள். போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள் கோழை எனக்கூறுகிறார்கள். உண்மையில் இன்று நிலைமை அப்படியே இருக்கின்றது. பிரபாகரன் தப்பிச்செல்வதற்கான வழிகள் ஏதும் இருந்தனவா? அவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? அவர் எரிக்கப்பட்டாரா? புதைக்கப்பட்டாரா? இப்படியெல்லாம் பல்வேறு கோணங்களில் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்தன. தற்போதைய காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் சந்தேகத்திற்கிடமானவர்களை கைதுசெய்வதும் அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைப்பதுமான சம்பவங்களே இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே யுத்தம் முடிவுற்று சிறிது காலகட்டத்தினுள் 500 இற்கும் மேற்பட்ட புலனாய்வுப் போராளிகள் வெளிநாட்டில் இயங்கிவருகின்ற நாடுகடந்த தமிழீழ அரசின் செயற்பாட்டாளர் உருத்திரகுமாரனால் அனுப்பிவைக்கப்பட்டதாக செய்திகள் அப்பொது வெளிவந்தன. அவற்றை அடிப்படையாக வைத்துப்பார்க்கின்ற பொழுது, விடுதலைப்புலிகளின் இடைநிலைப்போராளிகள் பிரபாகரனால் ஏற்கனவே அமைத்துவைக்கப்பட்ட பதுங்கு குழிகளுக்குள் இருந்துதான் மக்களோடு மக்களாக வெளியேறியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

பிரபாகரனுடைய ஆனந்தபுர பதுங்கு குழி தொடர்பாக பார்க்கின்றபொழுது, இறுதி யுத்தத்தின்போது குறித்த வீடும், பதுங்கு குழியும் விடுதலைப்புலிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருக்கின்றது. இதனால் உள்ளே என்ன இருக்கின்றதென்பதை படையினர் கூட இன்னமும் அவதானிக்கவில்லை என கூறப்படுகின்றது. இதனால் நுழைவாயில் அடைக்கப்பட்டிருக்கின்றது. எனினும், இடையில் படையினர் துளையிட்டு பார்த்துள்ளனர். மேலும் இதனுலிருந்து துர்நாற்றம் ஆரம்பத்தில் வீசியதாகவும் படையினர் கூறியுள்ளனர். குறித்த கிராமத்திற்குள் முற்றாக இடிந்த நிலையிலுள்ள குறித்த வீட்டின் பின்புறத்திலிருந்து ஆரம்பிக்கும் பதுங்கு குழி சுமார் 300 மீற்றர் தொடக்கம் 400 மீற்றர் வரையில் நிலத்திற்குக் கீழ் கொங்கிறீற்றால் அமைக்கப்பட்டுள்ளது. மேலுள்ள வீடு செங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டிலிருந்தபோதே இறுதி யுத்தத்தின் போது தேசிய தலைவர் சுற்றிவளைக்கப்பட்டதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்தப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வீட்டை சென்று பார்க்க முடிகின்றது. எனினும், உள்ளே சென்று பார்ப்பதற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. இவ் விடயம் தொடர்பில் மக்களின் கருத்துக்களை பெற முயற்சித்த போதும் அச்சம் காரணமாக வெளிப்படையாக கருத்துக் கூற மறுத்தாலும் இவ்வாறான புலிகளின் தலைவரின் வீடு என ஒரு வீட்டை படையினர் கைப்பற்றியதாகவும் அது நிலத்திற்கு கீழ் உள்ளது என அவர்கள் கூறுவதை அவதானிக்க முடிவதாக பெயர் குறிப்பிட முடியாத கிராம வாசி தெரிவித்தார்.

இவ்வாறிருக்கும் நிலையில் ஏழு கிபிர் விமானங்களைபிரபாகரன் ஏற்கனவே கொள்வனவு செய்தார் என்றும் அதனது உதிரிப்பாகங்கள் எங்கு புதைக்கப்பட்டன என்பதான விடயங்கள் தற்பொழுது கசிய ஆரம்பித்துள்ளன. இதனால் அரசாங்கம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் அரசின் உயர் மட்டக்குழுக்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளது. இன்னும் இன்னும் எத்தனை பதுங்கு குழிகள் கண்டுபிடிக்கப்படப்போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## மீண்டும் புலிகள் என்பது அரசாங்கத்தினால் அரங்கேற்றப்பட்ட நாடகமோ?

கடந்த 05 வருட காலமாக போர் முடிவுற்றது என்று அரசாங்கம் அறிவித்துள்ள இந்நிலையில் மீண்டும் விடுதலைப்புலிகள் உருவாகியுள்ளார்கள் என்று கூறுவதை மக்கள் ஏற்கத் தயாராக இல்லை. விடுதலைப்புலிகளுடைய போராட்டம் தமிழ்த்தேசியத்தலைவருடன் முடிவடைந்துவிட்டது என்று இலங்கையரசு கங்கணம் கட்டிநிற்கின்றது. அதே நேரம் விடுதலைப்புலிகள் அழித்தொழிக்கப்பட்டுவிட்டார்கள் என்று இந்திய அரசு நம்பியிருக்கின்றது.

பிரபாகரனினது உடலில் DNA பரிசோதனை செய்யப்பட்டதோ என்னவோ? பிரபாகரன் இன்னமும் உயிருடன் இருக்கின்றார் என்றுதான் தமிழ்மக்கள் நம்பியுள்ளனர். உலகநாடுகளின் சர்வதிகாரப் போக்கினை நன்குதெரிந்து வைத்திருந்த பிரபாகரன் தனது புலனாய்வுக்கட்டமைப்பினரை ஏற்கனவே வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்துவிட்டார். இவர்கள் தான் தற்பொழுது தமிழீழப்போராட்டத்தை கொண்டுசெல்பவர்களாக செயற்பட்டுவருகின்றனர். இதற்கு உறுதுணையாக நாடுகடந்த தமிழீழ அரசு செயற்பட்டுவருகின்றது. ஒசாமா பின்லேடனால் இரட்டைக்கோபுரம் தாக்கியளிக்கப்பட்டதையடுத்து பிரபாகரனை ஒழித்துவிடவேண்டும் என அமெரிக்கா திடசங்கற்பம் பூண்டது. அதனாலே முழுமூச்சாக இலங்கையரசிற்கு பாரியளவில் இராணுவ உதவிகளையும், பாரிய கப்பல்களையும் வழங்கியிருந்தது. அதனோடு கூட விடுதலைப்புலிகளுக்கெதிரான யுத்தம் வன்னிப்பெருநிலப்பரப்பில் முடுக்கிவிடப்பட்டது. இந்த யுத்தத்தின் போது பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாகவே இலங்கையரசு அவரது படத்தை வெளியிட்டிருந்த போதிலும் அது இலங்கையரசினால் போலியாக தயாரிக்கப்பட்டது என்று கணனி வல்லுனர்களால் நிருபிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விடுதலைப்புலிகளின் போராட்டம் தொடர்கதையாக மாறத்தொடங்கியுள்ளது. நந்தன், அப்பன், தேவியன் கொல்லப்பட்டமையானது இலங்கையரசினால் தயாரிக்கப்பட்ட ஒரு நாடகமே. விடுதலைப்புலிகள் மறுபடியும் தமது போராட்டத்தை தொடங்குவதாக இருந்தால் வெறுமனே மூன்று, நான்கு நபர்களை வைத்து ஆரம்பிப்பார்கள் என்றுகூறமுடியாது. ஆனால் விடுதலைப்புலிகள் வலுவான ஒரு கட்டமைப்பைக் கொண்டிருந்த இயக்கமாகும். நெடுங்கேணி வெடிவைத்தல்லுப் பகுதியில் புலிகளின் நடமாட்டம் கண்டறியப்பட்டு அதன்பின்னரே இந்த மூவரும் கொலைசெய்யப்பட்டனர் என்று இலங்கையரசினால் கூறப்பட்டது. ஆனால் இவர்களுடைய உடல்கள் ஊடகங்களுக்குக் காண்பிக்கப்படவில்லை. அவ்வாறு காண்பிக்கப்படாமையின் நோக்கம் என்னவென்று பார்க்கின்றபொழுது, இவர்கள் சுடப்பட்டார்கள் என்று சொன்னால் எப்போது சுடப்பட்டார்கள்? அதனது தன்மை என்ன? இவர்கள் அடித்துக்கொல்லப்பட்டார்களா? என்றெல்லாம் ஆராய்ச்சி செய்ய ஊடகங்கள் தயாராகிவிடும். கடைசியில் சனல் 4 தொலைக்காட்சி வரை விவகாரங்கள் வெளிவரலாம் என்கின்ற காரணத்தினால் அரச தரப்பினர் மூடிமறைத்திருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் நெடுங்கேணிக்காட்டினுள் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப்புலிகளாக இருந்தால் நிச்சயமாக 5ம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்துவிட்டது என்று கூறலாம். இதனை ஏன் அரச தரப்பு மூடிமறைத்தது. ஆனால் இதன் பின்புலத்தில் செயற்பட்டவர்கள் என்று கூறப்படும் நூற்றுக்கணக்கானோர் புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். உங்களை ஏன் கைதுசெய்தார்கள் என்று அவர்களிடம் வினவியபொழுது அவர்கள் கூறும் விடயம் என்னவென்றால் எமக்கு சொன்ன வேலைகளைச்செய்தால் பணம் தருவதாக கூறினார்கள். நாங்கள் பணக்கஷ்டத்தில் இருக்கின்றோம். பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் தெரிவித்த விடயம் எனக்கு ஆட்டோவுக்கு லீசிங் செலுத்துவதற்கு பணம் இல்லை. நான் வறிய குடும்பத்தில் பிறந்தவன். அன்றைய தினம் எனக்கு பத்தாயிரம் ரூபாய் தேவைப்பட்டது. நான் யோசித்துக்கொண்டு கிளிநொச்சியில் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தேன்.

இருவர் மோட்டார் சைக்கிளில் வந்தனர். என்ன பிரச்சினை? ஏன் இப்படி இருக்கிறாய்? என்று என்னிடம் கேட்டனர். எனது முச்சக்கரவண்டி லீசிங் இருக்கிறது. செலுத்துவதற்கு பத்தாயிரம் பணம் வேண்டும். அதனைப் பற்றித்தான் யோசித்துக்கொண்டிருக்கின்றேன் எனக் கூறினேன். உனக்கு நாங்கள் ஐம்பதாயிரம் பணம் தருகின்றோம். நாங்கள் சொல்கின்ற வேலையை நீ செய்தால் தருகிறோம் என்றனர். நாங்கள் தருகின்ற துண்டுப்பிரசுரங்களை வீதிகளில் ஒட்டவேண்டும். எனது வங்கிக்கணக்கினை தருமாறு கூறினர். வங்கிக்கணக்கினை கொடுத்தேன். அவர்கள் கூறியதைப்போன்று ஐம்பதாயிரம ரூபாய் பணம் வைப்பிலிடப்பட்டது.

நானும் பணத்தினை எடுத்துவிட்டு அவர்கள் கொடுத்த துண்டுப்பிரசுரங்களை ஒட்டுவதற்கு சென்றேன். அவ்வாறு ஒட்டிக்கொண்டிருக்கும் போது இராணுவத்தினர் என்னை கைது செய்தனர். இப்படிப்பட்ட சம்பவங்களும் நடந்து இருக்கின்றன. இதேபோன்றே கைது செய்யப்பட்ட 65 நபர்களுடைய முறைப்பாடுகளும் அமையப்பெறுகிறது. அவர்களும் இக்குழுவினரிடம் இருந்து ஏதோவொரு வகையில் உதவிகளைப் பெற்றவர்களே. இந்நிலையில் விடுதலைப்புலிகளின் புலனாய்வு அமைப்பு ஆரம்பகட்டத்தில் எவ்வாறு செயற்பட்டார்களோ அந்த வடிவமைப்பில் உருவெடுத்துள்ளது. முன்பு காட்டிற்குள் இருந்துபோராடியதைப்போன்று முடியாது. தற்பொழுது இந்தியா, சீனா போன்ற நாடுகள் அதிநவீன ராடர் கருவிகளை வழங்கியுள்ளது. இதன்காரணமாக துல்லியமாக விடுதலைப்புலிகளின் அசைவுகளை கண்டறிய முடியும். இவ்வாறு கண்டுபிடிப்பார்கள் என்பது விடுதலைப்புலிகளுக்கும் தெரியும். அவ்வாறிருக்கின்ற சந்தர்ப்பத்தில் வெடிவைத்தகல்லு பகுதிகளில் விடுதலைப்புலிகள் தமது செயற்பாடுகளை செயற்படுத்தியிருப்பார்களா என்பது கேள்விக்குறிதான்.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

13

குளத்தடி வெட்டையைச் சற்று மேவிக்கடந்து மறுபுறமாக வந்த தணிகைச் செல்வி பற்றைகளிடையே மறைந்திருந்த கன்காணிப்புக் காப்பரணைத் தாக்க, கஜாளினியும் தாக்க படையினரின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டு காப்பரண் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

அழித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டது. குறிப்பிட்டளவு இராணுவத்தைச் சுட்டதும் ஆயுதங்களை எடுத்ததும் மட்டுமல்லாது தளத்தின் வெளிப்புறமும் தேடுதல் நடவடிக்கையைச் செய்தது. நிறையப் பேர் வீரச்சாவும் காயமும் அடைந்தபோதும் எஞ்சிய மிகுதிப் பேரை வைத்து தமக்குத் தலைவரால் தரப்பட்ட பணியைச் சிறப்பான முறையில் மாலதிபடையணி செய்துமுடித்தது என்றார் மீட்பு நடவடிக்கையை வழிநடத்திய கேணல் கஜாளினி, தூயவள், ரத்தி, அருளினி, மகா, மேஜர் பவளம், கப்டன் சந்திரமதி போன்ற பல பொறுப்பாளர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையில் முல்லைப்போரில் பங்கெடுத்த மாலதி படையணி, தலைவரின் கனவை நனவாக்கிவிட்டிருந்தது.

சண்டை முடிந்தபின்னர் எமது படையணியின் கண்ணிவெடி அணியினர் முல்லைத் தளத்தில் படையினரால் விதைக்கப்பட்ட நிலக்கண்ணிகளை அகற்றும் பணியில் மூன்று மாதங்களுக்கும் கூடுதலாக ஈடுபட்டனர். மீட்பு நடவடிக்கைக்கு முன்பே அவர்களது பணி ஆரம்பமாகி விட்டிருந்தது.



யாழ்.மகளிர் தாக்குதலணியின் பொறுப்பாளரான தணிகைச்செல்வி கள அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கேணல் விதுஷாவின் ஒரு உதவியாளராக ஓயாத அலைகள்-01 நடவடிக்கையில் பங்கேற்றிருந்தார். இதற்கிடையில் தட்டுவன்கொட்டிப் பகுதியில் நிலைகொண்டிருந்த டெய்சியின் கொம்பனி அஜந்தியுடன் புறப்பட்டு மாலையில் முல்லைத்தீவுக்கு வந்துசேர்ந்தது. அது உடனேயே வெட்டுவாய்க்கால் பாலத்துக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட பாதையால் உள்நுழைந்து தளத்தின் மையப்பகுதியைப் பாதுகாத்து நின்ற காப்பரண் வரிசையை முற்றுகையிட்டது. கொங்கிறீற் கற்களால் அடுக்கி அமைக்கப்பட்டிருந்த அந்த அரண் 30 ஓட்டைப் பொயின்ற் என்று பயிற்சிக் காலத்திலிருந்தே எம்மவர்களால் அழைக்கப்பட்டது.

இந்த 30 ஓட்டைப் பொயின்ற் மறுநாள் 19 ஆம் திகதி ஒருபுறம் தமிழ்செல்வியோடு நின்றவர்கள் தாக்க மறுபுறம் டெய்சியின் கொம்பனி தாக்க இரண்டாம் நாள் பெருஞ் சண்டை தொடர்ந்தது. முல்லைத்தீவுப் படைத்தளத்தின் வெளியரண்களிலும் உட்பகுதியிலும் கடுமையான பல சண்டைகளில் ஈடுபட்டோம். பலர் காயமடைந்திருந்தனர்.

பலமான எதிர்த் தாக்குதல்களின் மத்தியில் 30 ஓட்டைப் பொயின்ற் கைப்பற்றி அதில் நிலை கொண்டவாறு அன்று ஒருநாளில் மட்டும் மூன்று தடவைகள் தளத்தின் மையத்தினுள் புகுந்து அடித்தன எமதணிகள்.

வெட்டுவாய்க்கால் வந்த அணியும் உள்ளே நின்ற அணியும் சேர்ந்து ஒன்றாகி இரண்டாம் நாள் மாலையில் தளத்தின் உட்புறக் காப்பரண்களையும் வெளிப்புறக் காப்பரண்களையும் பாதுகாத்ததுடன் இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் தேடி பால்ராஜ்.

மூன்றாம் நாளின் முடிவில் சிதறி நின்ற இராணுவத்தினரின் சிறு சிறு எதிர்ப்புகள் கூட அடக்கப்பட்டிருந்தன. மேஜர் தணிகா சண்டை தொடங்கிய முதல் நாளிலேயே தனது பதுங்கிச் சூடுகளை ஆரம்பித்துவிட்டிருந்தார். இரண்டாம் நாள் தனக்குப் பொருத்தமான இடமாக ஒரு காப்பரணைத் தெரிவுசெய்து அதன்மேல் தனது பதுங்கிச் சுடும் துப்பாக்கியை நிலைப்படுத்தியவர், தப்பியோடுகின்ற நிலை குலைந்து சிதறுகின்ற இராணுவத்தினரை எண்ணி எண்ணிச் சுட்டுக்கொண்டிருந்தார்.

லெப்.கேணல் ஞானியின் 50 கலிபர் துப்பாக்கிக்கு ஓய்வே இருக்கவில்லை. கப்டன் குறிஞ்சியினதும் அருள்மொழியினதும் 60மி.மீ எறிகணை செலுத்தும் தொகுதிகளின் சூடுகுழல்கள் சிவந்துகிடந்தன. யோகமலரது 81மி.மீ எறிகணை செலுத்தி எமது அணிகள் ஆதரவுச் சூடு கேட்ட இடமெங்கும் எறிகணைகளை வீசிக் கொடுத்தது. சுடரவள், ராஸேஸ்/சுதா, சயந்தினி, அம்பிகா ஆகியோரால் வழிநடத்தப்பட்ட காவும் குழுக்கள் தம் பணியைச் சரியாகச் செய்திருந்தன.

கப்டன் மகாதேவியின் FN MAG தனது உச்சப் பயன்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது. செல்வரஞ்சினி திசைதிருப்புத் தாக்குதல் ஒன்றை நந்திக்கடலோரம் மிகச் சிறப்பாகச் செய்து முடித்தபின் தன் அணியுடன் உள்ளகத் தாக்குதலிலும் இணைந்திருந்தார். கரும்புலி மேஜர் ஜெயராணி, கரும்புலி மேஜர் சிறீவாணி, 2ஆம் லெப். கீர்த்தனா, வாணி உட்பட ஒரு குழு சண்டையின்போதான உள்ளக வேவுப் பணியை தாக்குதல் அணிகளுக்குத் தேவையானபோதெல்லாம் ஓய்வொழிச்சலில்லாமல் செய்திருந்தது.

சிறப்புத் தளபதி கேணல் விதுஷாவுடன் மேஜர் பூமளா, கப்டன் ஜீவினி, கப்டன் நகுலேஸ், நிசாந்தி, கப்டன்

முல்லைச்சமரின்போது எமது படையணி உள்நுழையவிருந்த பாதைகளில் கண்ணிவெடிகளை அகற்றினோம். அந்த நடவடிக்கையின் போது கண்ணவெடி வேலைகளுக்கு லெப். கேணல் நிர்மா பொறுப்பாக நின்றார். முல்லைத்தீவு மீட்கப்பட்டபின் அந்தக் கண்ணிவயலைத் துப்புரவாக்கும் பணியில் நாம் முழுமையாக ஈடுபட்டோம். வெவ்வேறு பிரிவுகளிலிருந்தும் குறிப்பாக லெப்.கேணல் தணிகைச்செல்வி அவர்களின் யாழ் தாக்குதல் மகளிர் அணியிலிருந்து அனுபவத்தைப் பெறுவதற்காக எங்களுடன் வந்து நின்றவர்களெல்லோருக்கும் பயிற்சியளித்து, கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபடுத்தினோம் என்று தமது பணிபற்றிக் குறிப்பிட்டார் அஸ்வினி அவர்கள்.

தட்டுவன் கொட்டியில் நின்ற டெய்சியின் கொம்பனி அவசர அழைப்பின்பேரில் முல்லைச் சமருக்குப் புறப்பட்டபோது, லெப். கேணல் தட்சாயினியையும் பமிலாவையும் தட்டுவன்கொட்டியில் விட்டுவிட்டே வந்தது. அவர்களிருவரும் அங்கு நின்ற ஏனைய பிரிவுகளின் மகளிர் தாக்குதலணிகளின் பணிகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்கள். பொன்னியின் செல்வனில் வரும் பெரிய பழுவேட்டையரைப் போலல்லாது அவரை விடவும் அதிக வடுக்களைச் சுமந்தும் தாக்குதலணியை விட்டு வெளியேற மறுத்த தாட்சாயினிக்கும் சண்டைகளைத் தவிர வேறொன்றையும் கனவில்கூடக் கதைக்கத் தெரியாத பமிலாவுக்கும் தாம் இல்லாமல் ஒரு சண்டை நடப்பது உலக மகாகொடுமையாக இருந்தது.


முல்லைத்தீவில் புலிகள் நிகழ்த்திய சாதனைகளையும் தலைவரது திட்டமிடலின் வீரியத்தையும் முழு உலகமும் வானலைகளுடே கேட்டறிந்தது போலத்தான் தாமும் அப்போர்பற்றி அறியவேண்டியிருந்தது அவர்களுக்குச் சினத்தை மூட்டியிருந்தது. பூநகரி 4 ஆம் கட்டையில் பறந்த கொசுக்களுக்குக்கூடத் தமது பகுதியில் நின்று புலிகள் செய்த ஆயத்தம் எதற்கானது என்று புரிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தளவு உச்ச இரகசியம் பேணலின் விளைவாக நடந்து முடிந்த வெற்றிச் சண்டையில் எல்லா அணிகளுக்கும் பின்னாலே போயிருந்தாலும் மிகச் சிறப்பாகப் பாரிய பங்களிப்பை ஆற்றிய டெய்சியின் கொம்பனி மறுபடியும் தட்டுவன்கொட்டிக்குப் புறப்பட ஆயத்தமானது.

தொடர்வான்...

**தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்**

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 58. | வீ.வே மாலதி | சுகந்தி இரத்தினசிங்கம் | யாழ்ப்பாணம் | 1996.07.19 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |
| 59. | வீ.வே மலையரசி | தமிழ்ச்செல்வி வேலாயுதபிள்ளை | திருகோணமலை | 1996.07.19 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |
| 60. | வீ.வே.ஈழராணி | கனகாம்பிகை சின்னத்தம்பி | முல்லைத்தீவு | 1996.07.19 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |
| 61. | 2ம்.லெப்.வேதினி | தர்சினி தர்மன் | யாழ்ப்பாணம் | 1996.07.19 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |
| 62. | 2ம்.லெப்.சாமந்தி | ஜெயந்தி ஜீவரட்ணம் | யாழ்ப்பாணம் | 1996.07.19 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |
| 63. | 2ம்.லெப்.குகதா | சுஜாத்தா சண்முகலிங்கம் | யாழ்ப்பாணம் | 1996.07.19 | முல்லைத்தீவு ஓயாத அலைகள் 1 |

# ஜெனிவா மனித உரிமை சபையில் கோமாளிகள் கும்மாளம்



பல ஆலோசனைகள், பேச்சு வார்த்தைகள், வாக்குவாதங்கள், நாசகார வேலைகளுடன், அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட சிறிலங்கா மீதான கண்டனப்பிரேரணைக்கு சார்பாக 23 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும், நடுநிலையாக 12 வாக்குகளுடன் ஐ.நா. மனித உரிமை சபையின் 25வது கூட்டத் தொடரில் வெற்றிகரமாக நிறைவேறியது. சார்பாக நிச்சயம் 23 வாக்குகள் கிடைக்குமெனை, வாக்கெடுப்பிற்கு இரு தினங்களுக்கு முன்னர் ஒரு செவ்வியில் குறிப்பிட்டிருந்தேன்.

இதேவேளை கடந்த ஜனவரி மாதத்திலேயே, இப்பிரேரணை நிச்சயமாக எவ்வித ஐமிச்சமும் இல்லாது வெற்றிபெறும் என ஆருடம் கூறியிருந்தது சகலருக்கும் நினைவிருக்கலாம். இவ் தீர்மானம் பற்றி நாம் ஆராயுமிடத்தில், உண்மையில் இவ் தீர்மானத்திற்கு சார்பாக 23 வாக்குகள் அல்லா, 25க்கு மேற்பட்ட நாடுகள் வாக்களித்திருக்க வேண்டும்.

ஆனால் கடந்த பாரளுமன்றத் தேர்தலில் மிகவும் படுதோல்வியடைந்த தமிழ் கட்சியை சார்ந்த நான்கு கோமாளிகள், ஜெனிவாவிற்கு வந்து செய்த கும்மாளத்தினாலும் நாசகார வேலைகளினாலும் 23க்கு மேல் எந்த நாடும் சார்பாக வாக்களிக்கவில்லை. இவ்தீர்மானத்தில் இவர்கள் நிலைப்பாடு என்பது, சிறிலங்கா அரசிற்கு உரம் சேர்த்தது மட்டுமல்லாது, சர்வதேச சமுதாயத்திடம் இந்த தீர்மானம் எந்த பிரயோசனமும் அற்றது எனக் கூறியதுடன், இவ் தீர்மானத்தை முன்மொழிந்த அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளை ஏளனமும் செய்தார்கள்.

## பிழை காண்பதே வேலை

இதில் வேடிக்கை என்னவெனில், இவர்களது மறைமுக நிலைப்பாட்டிற்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெளிப்படையான நிலைப்பாடுகளிற்கு இடையில் எந்தவித வேறுபாடுகளையும் நாம் காண முடியாது. காரணம், தமிழ் வாக்காளர்களில் 5000 பேர் தவிர்ந்த வேறு யாரும் தமக்கு வாக்களிக்காததால், அவர்கள்தொடர்ந்து பல இன்னல்கள், கஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமென்பதற்காக, தொட்டதெற்கெல்லாம் சாக்கு போக்கு கூறுவதும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் பிழை காண்பதையே இவர்கள் தமது கடமையாக கொண்டுள்ளனர். இவர்கள் தேர்தலில் தோல்வியுற்ற காலம் முதல் இன்று வரை தமிழ்மக்களுக்கு எதையும் உருப்படியாக செய்தது கிடையாது.

ஜனாதிபதி ராஜபக்ஷ வெளிப்படையாக கூறுவது என்னவெனில், வடக்கு கிழக்கு வாழ் மக்கள் யாரும் எனக்கு வாக்களிக்கவில்லை, ஆகையால் நான் ஏன் அவர்களைப்பற்றி அக்கறை கொள்ள வேண்டும் என்பதே. யாழிலிருந்து ஜெனிவா வந்த இக் கோமளிகள், ஐ. நா.வில் அடித்த கும்மாளத்திற்கும் செய்த நாசகார வேலைகளுக்கு பல சாட்சிகள் உண்டு. இது பற்றி எழுதுவதானால் பல பக்கங்கள் எழுதலாம்.

## வேடிக்கைகள்

ஆங்கிலம் தெரிந்தவர்கள், சட்டம் படித்தவர்கள், படிப்பிப்பவர்கள் எல்லோரினாலும், ஐக்கிய நாடுகள் சபையினால் முன் வைக்கப்படும் பிரேரணைகளை புரிந்து கொள்ள முடிகிறதா என்பது சந்தேகத்திற்குரியது. இவர்கள் ஜெனிவாவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை குறை சொல்வதுடன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பிரிவுபடுத்துவதற்கான வேலைகளையும் மேற்கொண்டார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பு இவ் தீர்மானத்தை ஆதரிப்பதற்காக, இவர்கள் சில விசமத்தனமான குறைகளை கூறி தம்முடன் இத்தீர்மானத்தை எதிர்ப்பதற்கென ஒரு குழுவை திரட்டினார்கள். மக்களுக்கு சுயநிர்ணய உரிமையின் பாதுகாவலர்களாக முகங்காட்டும் இவர்களில் ஒருவர், ஐ.நா மனித உரிமை சபையின், சிறுபான்மையினருக்கான உரிமை என்ற நிசழ்ச்சி நிரலுக்கு கீழ் உரையாற்றுவதற்கு தனது பெயரை பதிவு செய்து கொண்டார்.

இவ் நிகழ்ச்சி மனித உரிமை சபையில் காலம் கடத்தி 20ம் திகதி நடந்த காரணத்தினால், கோமாளிகளது பத்திரிகையாளர் மாநாடு எனப்படும் பிரச்சார கூட்டமும், சிறுபான்மை விடயமும் ஒரே நாளில் நடைபெற்ற காரணத்தினால், இவர் சபையில் உரையாற்றுவதை தவிர்த்து கொண்டார். தற்செயலாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து யாரும் இச் செயலில் ஈடுபட முன்வந்திருந்தால், சுயமாக சிந்திக்க முடியாத தமது சில புலம் பெயர் தேசத்து சகாக்கள் மூலம், இவ் விடயத்தை காட்டு தீபோல் பரப்பி, தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு கரி பூச முனைந்திருப்பார்கள்.

இவர்கள் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்திட்டத்தில், சுயநிர்ணய உரிமைக்கான விடயம் இல்லையென நொண்டிச் சாட்டு கூறி கூட்டமைப்பிலிந்து விலகியவர்கள். நாம் இவ்விடயம் மூலம், மக்களது அரசியல் நிலைமைகளை அங்கு கூறுகிறோம் என்பதை நாம் மறைக்கவில்லை. ஆனால் நாங்கள் யாரும் சுயநிர்ணய உரிமையின் பாதுகாவலர்களாகமக்களுக்குஒருபொழுதும் நடித்தது கிடையாது.

## சர்வதேச பெளத்த நிறுவனம்

ஐ. நா. மனித உரிமை சபை நடைபெற்றவேளையில், மார்ச் 20ம் திகதி, ராஜபக்ஷ அரசிற்கு ஆதரவான, “சர்வதேச பெளத்த நிறுவனம்” எனும் சிங்கள்வர்களினால் நடாத்தப்படும் அமைப்பு, ஓர் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. இவ் கூட்டம் பற்றி, 25வது கூட்ட அமர்வு ஆரம்பமாகிய மார்ச் 3ம் திகதியே பலருக்கு தெரியும். ஆனால் இக்கூட்டம் நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே, ஐ.நா.வின் விளம்பரம் மூலம் சகலரும் அறிவார்கள்.

ஆனால் இக்கோமாளிகள், சர்வதேச பெளத்த நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அதே தினத்தில் அதே நேரத்திற்கு, ஐ.நா. மண்டபத்திற்கு வெளியில் ஒரு பத்திரிகையாளர் மாநாடு எனப்படும், தமது பிரச்சாரக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்கள். இதனால் மனித உரிமை சபையில் பங்கு கொள்ளும் ஏறக்குறைய 40 தமிழர்களில், நான் உட்பட மூவர்மட்டுமே, சிங்களவர்களின்சர்வதேச பெளத்த நிறுவனத்தின் கூட்டத்திற்கு செல்ல முடிந்தது. மனித உரிமை சபையில் கலந்து கொள்ளும் தமிழர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு, எமது அரசியல் விடுதலைப் போராட்டத்தின் உண்மைகளை சர்வதேச மேடையான ஐ.நா.வில் கூறாவிடில், தமிழர்கள் ஜெனிவா செல்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

## வன்னி பாரளுமன்ற உறுப்பினர்

உண்மையில், வன்னியிலிருந்து ஜெனிவா வருகை தந்திருந்த பாரளுமன்ற உறுப்பினர் திரு சிறிதரன், இவ் கூட்டத்திற்கு வருவதற்கு சம்மதித்திருந்த பொழுதும், அவ் கூட்டத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதை முன் கூட்டியே அறிந்த காரணத்தினால், இவர் அக் கூட்டத்தில் கலந்து கொள்வதை தவிர்த்து கொள்ளுமாறு வேண்டினேன். அக் கூட்டத்தில், வழமைபோல் தமிழர்களது சரித்திரம் திரிவு படுத்தப்பட்டு, பொய்யான தகவல்கள் பொய்யான புள்ளி விபரங்களை கூறி, சிறிலங்கா அரசாங்கத்தையும் இராணுவத்தையும் நியாயப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இலங்கைதீவின் சரித்திரத்தையே முன்பு அறியாது அங்கு கலந்து கொள்ளும் வெளிநாட்டவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் மிகவும் கொடியவர்களாகவே எண்ணுவார்கள். இவ்வேளையில் அங்கு சமூகமளித்திருந்த நாம் மூவரும், தமிழர்களது சரித்திரம் விடுதலை போராட்டத்தின் உண்மைகளை அங்கு கூறி, நிலைமைகளை தெளிவு படுத்தியதும், அங்கு ஓர் பூகம்பே வெடித்துவிட்டது.

இவ் கூட்டத்தில் சிங்களவர்களுக்கு ஆதரவாக, “கூலிக்கு மார்படிக்கும்” சுவிஸ்நாட்டில் வாழும் ஒட்டுக்குழுவை சார்ந்த ஒரு தமிழர், தமிழர்களை கொன்று குவித்த ராஜபக்ஷ அரசிற்காக தமிழில் வக்காளத்து வாங்கினார். அங்கு கூடியிருந்தவர்களில் நால்வர் தவிர்ந்த வேறு யாருக்கு இவரது அரட்டையும் அலட்டலும் விளங்கவில்லை. இதை தொடர்ந்து கொழும்பிலிருந்து வருகை தந்த ஓர் சிங்கள பத்திரிகையின் நிருபருக்கும் எனக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இவரினால் விவாதம்செய்ய முடியாத காரணத்தினால், இவர் மிகவும் கெட்ட வார்த்தையை அங்கு உபயோகித்தது மட்டுமல்லாது, “முடியுமனால் சிறிலங்காவிற்கு வா பார்ப்போம்? நீ அங்கு வந்தால் ஒன்றில் சிறைக்கு செல்வாய் அல்லது மிகவும் மோசமான நிலையை சந்திப்பாய்” என என்னை மிரட்டினார்.

மிகவும் வெட்கமான விடயம் என்னவெனில், சிறிலங்கா அரசும், ஜனாதிபதி ராஜபக்ஷ அரசும் புலம் பெயர் வாழ் தமிழர்கள், சிறிலங்காவின் வளர்ச்சியில் பங்கு கொள்ள வேண்டுமென கூறி சிறிலங்காவிற்கு வருமாறு அழைக்கும் அதேவேளை, இந்த இனத்துவேசி, “முடியுமனால் சிறிலங்காவிற்கு வா பார்ப்போமென சவால் விடுகிறார்.”

## நாசகார வேலை

யாதார்தமான உண்மை என்னவெனில், ஐ.நா.மண்டபத்திற்குவெளியில்பத்திரிகை மாநாடுகள், பிரச்சாரக் கூட்டங்கள் என்றும் விரும்பிய வேளைகளில் நடத்த முடியும். ஆனால் ஐ. நா. மண்டபத்திற்குள் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டங்கள், மனித உரிமை சபை வேளைகளிலேயே நடத்த முடியும். அத்துடன், இவ்வேளைகளிலேயே, சர்வதேச மேடைகள் அற்ற தமிழர்களாகிய நாம், சிங்களவர்களினால் நடாத்தபடும் “சர்வதேச பெளத்த நிறுவனம்” போன்ற அமைப்புக்களின் சிறிலங்கா அரச பிரச்சாரங்களை முறியடிக்க முடியும். இவ் நான்கு கோமாளிகள் முற்கூட்டி திட்டமிட்டபடி, எந்த தமிழர்களும், சிங்களவர்கள் நடத்திய இக் கூட்டத்திற்கு செல்ல முடியாது போயிருந்தால், சிங்களவர்கள் பெரும் வெற்றி கொண்டாடியிருப்பார்கள்.

இக் கோமாளிகளுக்கு இவ் கால, நேரம் உண்மையில் முக்கியனதாகவிருந்தால், இவர்களது பிரச்சார கூட்டம் பற்றி எத்தனை சுவிஸ் நாட்டின் பத்திரிகையோ அல்லது வெளிநாட்டு பத்திரிகையோ செய்திகள் வெளியிட்டிருந்தன? மிக வேடிக்கையான விடயம் என்னவெனில், இவர்களது கூட்டம் சில தமிழ் ஊடகங்கள் மூலமாக நேரடி ஒளிபரப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ் வேளையில் பிரான்ஸின் கல்விமானும், பிரான்ஸ் அரசிடம் “செவாளியே” பட்டம் பெற்ற, கலாநிதி ஜோன்-மரி யூலியா (சுகிர்தராஜா), இவர்களது நிலைப்பாடுகள், நாட்டில் வாழும் மக்களது எதிர்காலம், இவ் தீர்மானத்தை கைவிட்டு விட்டு வேறு என்ன செய்ய முடியும் போன்ற கேள்விகணைகளைதொடுத்ததும், ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பு யாவும் உடன் துண்டிக்கப்பட்டதுடன், பதிவு நாடாக்கள் யாவும் நிறுத்தப்பட்டது. அத்துடன் அங்கு எந்த கேள்வி பதில்களும் நேரடி ஒளிபரப்பு செய்யப்படவில்லை.

அதேவேளை இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் திரு சிவாஜிலிங்கம், “இவ் தீர்மானத்தை முன்வைத்துள்ள அமெரிக்காவிற்கு நாம் நன்றி கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளோமென” கூறியதும், இவ் கோமாளிகளினால், இதுவும் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தான் தமிழர் கூட்டமைப்பின் ஜனநாயகம் பற்றி குறை கூறுபவர்கள்!

## குழப்ப நிலை


எது என்னவானாலும், தமிழரிடையே அமெரிக்க தீர்மான விடயத்திலும் ஐக்கியம் இல்லை என்பதை அரங்கேற்றும் நோக்குடன் ஜெனிவா வந்த கோமாளிகள், தமது திட்டத்தை திறம்பட நிறைவேற்றினார்கள். இதனால் சில நாடுகள், சில தமிழர்களும் ஜனாதிபதி ராஜபக்ஷவும்விரும்பாத இவ்தீர்மானத்தில் தாம்ஏன் அக்கறைகொள்ள வேண்டுமென கூறி, இவ் தீர்மானத்திற்கு சார்பாக தமது வாக்குகளை பதிவு செய்யவில்லை.

கடந்த தேர்தலில் இக் கோமாளிகளுக்கு 5000 வாக்குகள் தான் கிடைத்தது என்பதை இவ் நாடுகள் அறிந்திருக்கவில்லை. அதேவேளை புலம்பெயர் தேசங்களில் இவர்களை ஆதரிப்பவர்கள் மிக அண்மைகாலங்களில் பல நோக்குகளுடன் அரசியல் தெரியாது அரசியலுக்கு வந்தவர்களும், தாமாக சிந்திக்க முடியாதவர்களுமே.

12 ஆம் பக்கம் பார்க்க...

ச.வி.கிருபாகரன்

# இலங்கையரசிற்கு பொருளாதாரத் தடை விதிக்கப்படுமா?



இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் செய்யக்கூடாத குற்றம் எல்லாம் செய்து விட்டு இராஜதந்திர ரீதியில் செயற்படாமல், உலகநாடுக ளுடன் ஒத்துழைக்காமல் எதேட்சதிகாரப் போக்கில் செயற்பட்டுவருகின்றது. இலங்கைக்கு எதிரான போர்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நாடுகள் எச்சரிக்கை விடுத்தும் அது தொடர்பாக கண்டு கொள்ளாது எந்த நடவடிக்கையும் எடுக்காது சர்வதேச நாடுகளின் மேல் பழிகளை சுமத்திக்கொண்டு பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமை பதவியை பெற்றுக்கொண்ட பின்னரும் சர்வதேச நிலைப்பாடுகளுக்கு மதிப்பளித்து அதனை செயற்படுத்துவதற்கு பதி லாக ஒருதலைப்பட்சமான சர்வாதிகார ரீதியில் இலங்கை செயற்பட்டு வருவது வருத்தத்திற்குரியது. இது தொடர்பில் கடும் நடவடிக்கையாக அமெரிக்கா இலங்கைமீது பொருளாதார தடையை விதித்து இலங்கை ஆட்சியாளர் உணரும்படியான அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் என்ற யோச னையை கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமெரிக்க காங்கிரஸின் மனித உரிமை தொடர்பான உப குழுவே இந்த யோசனையை கொண்டு வரவுள்ளது. மார்ச் மாதம் நடைபெற்ற ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டிற்கு பிறகு இந்த யோசனை காங்கிரஸ் சபையில் முன்வைக்கப்பட உள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. எந்த அரச ஆட்சியாளர்கள் குழுவாயி னும் இவ்வாறு முரண்டு பிடிக்கும் விதத்தில் நடந்து கொள்ளுமாயின் சர்வதேச சமூகம் அதனை அமைதியாக வேடிக்கை பார்க்காது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அமெரிக்காவின் உத்தேச பொருளாதார தடைவிதிப்பில் இலங்கை மக்களுக்கு தேவையான உணவு, மருந்து போன்றவற்றை தவிர மற்ற விடயங்கள் உள்ளடக்கப்படலாம் என கருதப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் இராஜதந்திரரீதியிலான செயற்பாடுகளை புறக்கணித்து விட்டு, தொடர்ந்தும்முரண்டுபிடிக்கும்வகையில் செயற்பட்டு வருவதால், இலங்கைக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிப்பது தொடர்பான முனைப்புகளை அமெரிக்கா மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் அளவில் இலங்கைக்கு எதிரான இந்த பொருளாதார தடை களை ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றதாக கூறப்படும் போர் குற்றங்கள் தொடர்பில் சர்வதேசநாடுகள் இலங்கை மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன. இதனை விட இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் விசாரணைகளை நடத்தாது தன்னிச்சையாக செயற்பட்டு வருவது குறித்தே சர்வதேச சமூகம் தற்பொழுது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது.

அண்மைய காலத்தில் உலகில் இடம்பெற்ற போர்களில் போர் குற்றங்கள் தொடர்பான அதிகமான சாட்சியங்கள் இலங்கையில் இடம்பெற்ற போர் குறித்தே வெளியாகியுள்ளன. இவற்றில் உண்மை இருக்கின்றதா இல்லையா என்பதை அறிய விசாரணைகளை நடத்தி கண்டறிய வேண்டும் என்ற பொறுப்பு இலங்கை அரசாங்கத்திற்கு உள்ளது. விசாரணைகளை நடத்தாது தொடர்ந்தும் அதனை புறக்கணித்து வருவது இராஜதந்திரமான செயல் அல்ல எனவும் . முரண்டுபிடிக்கும் தன்மை என்பதே அமெரிக்க காங்கிர ஸின் மனித உரிமை தொடர்பான உப குழுவின் நிலைப்பாடாகும்.

உண்மையா அல்லது பொய்யா என்பது இதுவரை கண்டறியப்படாத நிலையில், இலங்கையின் போர் பற்றி கிடைத்துள்ள சாட்சியங்கள் மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை கொண்ட சாட்சியங்கள் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். குறிப்பாக இலங்கையில் இருக்கும் வெளிநாட்டு வங்கி கணக்குகளை தடைசெய்தல், வெளிநாட்டவர் இலங்கை செல்லவும், இலங்கையர் வெளிநாடுகளுக்கு செல்லவும் வீசா வழங்குவதை இடைநிறுத்துதல் அல்லது கட்டுப்பாடுகளை விதித்தல், எரிபொருள் இறக்குமதி கட்டுப்பாடு, இலங்கையின் ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துதல் போன்றவை இந்த பொருளாதார தடையில் உள்ளடக்கப்படலாம்.

இலங்கையின் ஆட்சியாளர்கள் இதில் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால், போர் குற்றச்சாட்டு தொடர்பில் பொறுப்புக் கூறும் தன்மையுடன் பக்கசார்பற்ற வெளிப்படையான விசார ணைகளை உள்நாட்டில் ஆரம்பிக்க வேண்டும்என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என தமிழர் பண்பாட்டு நடுவம் அமைப்பு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. ஈழத்தமிழர்களை ஈவிரக்கமின்றி படு கொலை செய்த இலங்கை அரசாங்கம் மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும், தமிழகத்தில் இலங்கைப் பொருட்களை புறக்கணிக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து "தமிழர் பண்பாட்டு நடுவம்" அமைப்பினர் சென்னை மெரீனாக் கடற்கரையில் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பிஸ்கட், இறைச்சி, பழங்கள், ஆடைகள் என்பவற்றை புறக்கணிக்க வேண்டும் எனவும் தமிழர் பண்பாட்டு நடுவம் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் ஐக்கிய நாடுகள் மனித உரி மைப் பேரவையின் விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் இலங்கையின் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க முடியும் என ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் உறுப்பினர் யஸ்மீன் சூகா தெரிவித்துள்ளார். இவ்வாறு மஹிந்தவின் அரசாங்கம் செயற்படுமாயின் பாதகமான விளைவு களை எதிர்நோக்க நேரிடும் எனவும் அது அரச அதிகாரிகளுக்கான பயணத்தடை, வெளிநாட்டு முதலீட்டு தடை, சொத்து முடக்கம் போன்ற பல்வேறு வழிகளில் தடைகள் போன்றவற்றை ஏற்படுத்தக் கூடியதாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் சுயாதீன விசாரணைகளை இலங்கை ஜனாதிபதி நிராகரித்தமை அதிர்ச்சியளிக்கும் வகை யில் அமைந்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மன்றத்திற்கு இலங்கை விவ காரம் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக தருஸ்மன் தலை மையில் நிறுவப்பட்ட நிபுணர் குழு வில் சூகாவும் அங்கம் வகித்துள்ளார். இதேவேளை ஐ.நாவின் தீர்மானத்தினை இலங்கையின் ஜனாதிபதி வெளிப்படை யாகவே நிராகரித்துள்ள நிலையில் இக் கருத்து வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

மேலும் மனித உரிமைகள் விடயத்தை முன்வைத்து எந்த ஒரு நாடும் இலங்கை மீது பொருளாதார தடை களை ஏற்படுத்தினால் அதனை கண்டு இலங்கை அஞ்சாது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனை தெரிவித்துள்ளார். போர் முடிவடைந்த பின்னர் அரசாங்கம் பொருளாதாரத்தை உரிய வகையில் கட்டியெழுப்பியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எந்த ஒரு நாடும் இலங்கைக்கு பொருளாதார ரீதியில் அழுத்தம் கொடுத்தாலும் அதற்கு ஈடுகொடுக்க இலங்கை தயாரா கவே உள்ளது. இலங்கையில் சமாதா னம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப்படமாட்டாது.

மேற்கத்தேய நாடுகளுக்கு இலங்கை தலைவர் அடி பணிய மறுப்பதால் இலங்கை எதிர்காலத்தில் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியிருக்கும் என் றும் அவர்எச்சரித்தார். தமக்கு அடிபணிய மறுக்கும் தலைவரை மேற்கத்தேய நாடுகள் பதவியில் இருந்து அகற்ற முயற்சிக்கும். அதன் ஒரு கட்டமே ஜெனீவாவில் இடம்பெறுகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். எனினும் இலங்கை மக்கள் சவால்களுக்கு தயா ராக உள்ளதாக நிமல் சிறிபால டி சில்வா கூறினார்.

இலங்கையுடனான வர்த்தகத் தொடர்புகளை பிரித்தானியா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கோரும் புதியதொரு போராட்டத்துக்கு அங்குள்ள புலிகள் ஆதரவு தமிழ் அமைப்புகள் தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் மனித உரிமைகள் நிலையைக் காரணம் காட்டி, இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை வாங்கக்கூடாது என்பது தொடர்பாக, ஏற்கனவே பிரித்தானியாவின் உயர்மட்ட அரசியல்வாதிகளுடன் இந்த அமைப்புகள் பேச்சுக்களையும் நடத்தியுள்ளன. அமெரிக்காவுக்கு அடுத்ததாக, பிரித்தானியாவே இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி நாடாக விளங்குகிறது.

தேயிலை, ஆடைகள், மீன், மிதிவண்டி, இறப்பர், மாணிக்கம் மற்றும் நகைகள், தும்பு உற்பத்திகள், மட்பாண்டப் பொருட்கள், பழங்கள், காய்கறிகள், விளையாட்டுப் பொருட்கள் என்பன இலங்கையில் இருந்து பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அடுத்த ஆண்டு பிரித்தானியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், அங்குள்ள தமிழ் வாக்காளர்கள், பல இடங்களில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலையில் உள்ளனர்.

இந்தநிலையில் இலங்கை மீது வர்த்தகத் தடை விதிக்கப்பட்டால் ஆச்சரியப்படமாட்டேன் என்று அங்குள்ள சிங்கள அமைப்பின் தலைவர் டக்ளஸ் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். லண்டனில் உள்ள இலங்கை தூதரகம் அங்குள்ள இலங்கையர்களுடன் பேசி ஒருங்கிணைக்கத் தவறியதால், விடுத லைப் புலிகள் ஆதரவு தமிழர்களின் கை ஓங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாம் எல்லாவற்றையும் இழந்து விட்டோம். இலங்கை அரசாங்கம் ஒரு ஆதரவுதேடும் பொறிமுறையை உருவாக்காது போனால், நிலைமைகள் இன்னும் மோசமடையும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். இலங்கை மீது வர்த்தகத் தடைவிதிக்கப்பட்டால், தேயிலை மற்றும் ஆடை ஏற்றுமதி கடுமையான பாதிப்பைச் சந்திக்கும் என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கும் முனைப்புக்களில் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கையுடனான பொருளாதார உறவு களை துண்டிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் பிரித்தானிய அரசாங்கத்தை கோரத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப் பிடப்படுகிறது. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யும் பொருட்களை கொள்வனவு செய்வதனை தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களைப் போன்ற உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் புலம்பெயர் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதில்லை எனவும், இதனால் புலி ஆதரவாளர்கள் புலம்பெயர் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றில் முதல் தடவையாக பிரித்தானியா இலங்கை மீது கூடுதல் அழுத்தங்களை செலுத்தி வருவதா கத் தெரிவிக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்கள் மீதான சர்வதேச விசாரணையின் நிலைப்பாடு

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவின் முன்னெடுப்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை முன்வரைவு, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றிவிட்டதாக இலங்கையில் அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்திவரும் சிறுபான்மை சமூகங்களின் தலைவர்கள் கூறியுள்ளனர். பாரதூரமான மனித உரிமை



மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் நோக்குடன் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

போர்க்கால குற்றங்கள் பற்றி விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணை கோரப்படும் என்று சர்வதேச சமூகம் முன்னெடுத்துவந்த பிரச்சாரங்கள் பொய்த்துப் போயிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

இலங்கையில் ஆட்சி மாற்றத்தை மட்டும் சர்வதேச சமூகம் விரும்புகிறதே ஒழிய, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கமே அதற்கு இல்லை என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், காணாமல்போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் அரசியல் கைதிகளுக்கும் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும் நீதி வழங்க சர்வதேச சமூகம் தவறிவிட்டதாகக் கூறினார். தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை இலங்கை அரசாங்கம் தொடர்வதற்கு சாதகமாகவே அமெரிக்காவின் முன்னெடுப்பில் தீர்மான வரைபு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

இவ்வாறிருக்கையில் இதன் மறுபக்கத்தில் பார்க்கின்றபொழுது, இதற்கிடையே, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 25-வது அமர்வில் உரையாற்றிய இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று கூறிய மனித உரிமைகள் உயர் ஆணையர் நவிபிள்ளையின் அறிக்கையை கடிந்து பேசியிருக்கிறார். இலங்கையில் கடந்த 12 மாதங்களில் நல்லிணக்க நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் காணாமல்போனவர்கள் பற்றி ஜனாதிபதி ஆணைக்குழு விசாரித்துவருவதாகவும் ஜீ.எல் பீரிஸ் இங்கு கூறினார்.

கடந்த 30 ஆண்டுகால போர்க்கால இழப்புகள் பற்றி கணக்கெடுப்பு நடந்துள்ளதாகவும் 20 ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்துவெளியேற்றப்பட்ட சுமார் 75 ஆயிரம் முஸ்லிம்களை மீள குடியமர்த்தும் வேலைகள் நடந்துவருவதாகவும் வெளியுறவு அமைச்சர் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்தார். போர்ப் பிரதேசங்களிலிருந்து இராணுவம் படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதாகவும் மக்களின் சிவில் வாழ்க்கையில் இராணுவத்தின் தலையீடுகள் எதுவும் இல்லை என்றும் இலங்கை அமைச்சர் ஐ.நாவில் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்த தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பங்கெடுக்க மறுத்துவருவதாகவும் கூறிய ஜீ.எல் பீரிஸ், வடக்குப் பிரதேசங்களில் இன விகிதாசாரத்தை சிதைக்கும் முயற்சிகள் நடப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களையும் மறுத்துப் பேசினார்.

ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையரின் அண்மைய அறிக்கை, அவருக்குள்ள ஆணை–அதிகாரங்களுக்கு அப்பால் சென்றுள்ளது. அந்த அறிக்கையில் உள்ள பல பரிந்துரைகள் ஒருதலைப்பட்சமானதும் அநாவசியமாக மூக்கை நுழைப்பதும் அரசியல் நோக்கம் கொண்டதுமான பரிந்துரைகளாக உள்ளன என்றார் ஜீ.எல்.பீரிஸ். நவிபிள்ளை அம்மையாரின் அறிக்கை இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும் என்றும் சமூகங்களை மேலும் பிளவுபடுத்தும் என்றும் இலங்கை அமைச்சர் ஐ.நாவில் கூறிமுடித்திருந்தார்.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் இல்லை என்ற காரணத்தினால் இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கடந்த ஆண்டு இலங்கை சென்று திரும்பிய ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையர் நவிபிள்ளை கோரியிருந்தார். இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் புலம்பெயர் தேசங்களை தளமாக கொண்டு இயங்குகின்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மற்றும் தமிழர் அமைப்புக்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அனைத்துலக விவகாரங்களுக்கான அமைச்சு, பிரித்தானிய தமிழர் பேரவை, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை, இலங்கைத் தமிழ்ச் சங்கம், இலங்கையில் சமத்துவம் மற்றும் உதவிக்கான மக்கள் அமைப்பு, இலங்கையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஐக்கிய குழு, அமரிக்கத் தமிழர் அரசியற் செயலவை, உலகத் தமிழ் இயக்கம் ஆகியன ஒன்றிணைந்து கூட்டாக இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளன.

அறிக்கையின் முக்கிய விடயங்கள் :

மோசமான மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்கள் இடம்பெற்றமை தொடர்பான உண்மைகள் மற்றும் சூழமைவுகள் குறித்து விசாரணை செய்து நிருபிப்பதற்காக சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஸ்தாபிக்கப்படுகின்றமையை நாம் வரவேற்கின்றோம். 2014 மார்ச் 27 ஆம் திகதிஐ.நா.மனிதஉரிமைகள்கவுன்ஸிலில் இது தொடர்பாக நிறைவேறிய தீர்மானம் பரந்த, சர்வதேச விசாரணைக்கு வழி வகுக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்கு முந்திய காலத்தையும் 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னரான காலத்தையும் கூட விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என நாம் கோருகின்றோம்.

2009ம் ஆண்டில் சில மாதங்களில் இடம்பெற்ற 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களின் படுகொலை பற்றிய மறைப்புகள், இழப்பீடுகள், இன்னும் கணக்கெடுக்கப்படாமல் இருக்கும் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 தமிழர்களின் தலைவிதி, தப்பிப் பிழைத்த மற்றும் பாதிக்கப்பட்ட நிலையில் நீதியை எதிர்பார்த்திருப்போரின் விளக்கங்கள் ஆகியவை பற்றி எல்லாம் இந்தத் தீர்மானத்தில் அதிக பிரதிபலிப்புகள் அமைந்திருக்க வேண்டும் என நாம் எதிர்பார்த்திருந்தோம்.

இந்தப் பிரேரணையை நிறைவேற்றுவதற்காக அதற்கு ஆதரவாக வாக்களித்த 23 நாடுகளின் முயற்சிகளை உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்கள் பாராட்டும் அதேவேளை, சர்வதேச விசாரணை நிறுவப்படுவதற்கு எதிரான இந்திய நிலைப்பாடு குறித்து நாம் கவலையுமடைகின்றோம். ஈழத் தமிழர்களோடு தனித்துவமான கலாசாரப் பிணைப்பையும் அறிவு சார் நல்லுறவையும் கொண்டமைந்த சரித்திரத்தையும் தைரியத்தையும் கொண்ட நாடு இந்தியா. அது, இந்தப் பிரேரணையில் வாக்களிக்காமல் விட்டமையும் பிரேரணையில் விசாரணை முறைமையை ஏற்படுத்துவது தொடர்பான செயற்பாட்டுப் பந்திக்கு எதிராக வாக்களித்தமையும் எமக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்திருக்கின்றது. மேலும் தமிழர் பிரதேசம் இலங்கை இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்கியிருக்கின்றமையையும் வடக்கு கிழக்கு இராணுவ ஆதிக்கத்திலிருந்து அவசரமாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதையும் போதியளவில் வெளிப்படுத்துவதில் இந்தப் பிரேரணை குறைவாகவே உள்ளது.

அளவுக்கு மீறிய இராணுவப் பிரசன்னமானது தமிழர் பிரதேசத்தில் தொடரும் நிலப் பறிப்பு, அரச உதவியுடனான குடிப்பரம்பல் மாற்றம், பூர்வீக சொத்துக்கள், பாடசாலைகள், கோயில்கள் போன்றவை அழிக்கப்படல், தமிழ் மக்கள் மீதான கட்டாயகருக்கலைப்பு, தண்டனை விலக்களிப்புடனான பாலியல் வன்முறைகள் போன்றவற்றுக்கு வழிகோலியிருக்கின்றது. இவை காரணமாகவும் பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை பொறிமுறைக்கு அரசு வலுவுடன் போடக்கூடிய தடைகள் காரணமாகவும் சாட்சிகள், தப்பிப்பிழைத்தோர், மனித உரிமைகளுக்காக செயற்படுவோர் போன்றோரின் உடல் ரீதியான பாதுகாப்பையும், கௌரவத்தையும் உறுதிப்படுத்தக்கூடிய ஒரு பொறிமுறையை உருவாக்குமாறு நாம் ஐ.நா.வைக் கோருகின்றோம்.

ஐ.நா. சாசனத்தின் 99ம் பிரிவின் வழியே இந்த விவகாரத்தை கையாளுமாறு ஐ.நா. செயலாளர் நாயகத்தைக் கோருகின்றோம். இலங்கைத் தீவில் தமிழ் இனத்தை சிதைத்து, தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்பை மேற்கொள்வதை அடிப்படை இலக்காகக் கொண்டு, இலங்கையில் அடுத்தடுத்துவரும் அரசுகள் தொடர்ந்தும் பரவலாகவும் மேற்கொண்டு வரும் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களே இலங்கைப் பிரச்சினைக்கு மூலவேர் என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

இலங்கையில் சட்டவாட்சி என்பது இனவாத மேலாண்மையால் செழுமை பெற்ற இலங்கை அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டது. அதிகாரப் பரவலாக்கலில் தவறிவிட்டதாக இலங்கை உயர் நீதிமன்றத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும் 13 ஆவது திருத்தம்தான் ஒரே மார்க்கமாக இந்த ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பிரேரணை ஏற்றுக் கொண்டிருக்கின்றமை குறித்து நாம் வேதனையடைகின்றோம்.

1972 ஆம் ஆண்டு அரசமைப்பு, 1978 ஆம் ஆண்டு அரசமைப்பு, அதன் 13 ஆவது திருத்தம் போன்றவற்றின் உருவாக்கம் எதிலும் தமிழர்கள் பங்குபற்றவேயில்லை. எனவே, தமிழ் மக்கள் தங்களின் பெருவிருப்பினை எந்தத் தடைகளும் இன்றி வெளிப்படுத்தக் கூடிய ஜனநாயக இடைவெளி ஒன்றை ஏற்படுத்தித்தருமாறு சர்வதேச சமுகத்தை நாம் கோருகின்றோம். அப்படிச் செய்தால் மட்டுமே, சர்வதேச விசாரணை மூலம் பொறுப்புக் கூறக்கூடிய விதத்தில் பயனேதும் கிட்டுமானால், அது நீடிப்பதோடு இந்தத் தீவில் மக்களுக்கான நிலைத்த அரசியல் தீர்வாகவும் மாற முடியும். இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் இறுதித் தருணங்களில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் மற்றும் வன்கொடுமைகள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமானதாகும். இதற்காக ஐ.நா. முழு அளவில் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு அல்லாது இலங்கை அரசாங்கத்தின் சாக்குப் போக்குகளுக்கு ஐ.நா. இடம் அளிக்குமேயானால் தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட இன அழிப்பு மூடி மறைக்கப்பட்டுவிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும்சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கம் உள்நாட்டு யுத்தத்தின் உண்மைகளை மறைக்கும் முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வந்தது. ஆனால் அவை காலத்தின் கட்டாயத்தால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு சூழலில் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இறுதியாக சனல்-4 வெளியிட்டுள்ள அந்த வீடியோக் காட்சிகள் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்களை மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்தியுள்ளது. இந்நிலையில், உண்மைகளை கண்டறிய வேண்டியது கட்டாய தேவையாகும். அவ்வாறு அல்லாது தமிழ் மக்களுக்கு சுதந்திரமான வாழ்வையோ, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தையோ ஒரு போதும் நிலைநாட்டிவிட முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணையை தொடங்க வேண்டும் என்று, ஐ.நா. மனித உரிமைகள் குழு தலைவர் நவி பிள்ளை பரிந்துரை செய்து இருக்கிறார். இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடைபெற்ற இறுதிக்கட்ட போரின்போது 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டதாக ஐ.நா.சபை ஏற்கனவே குற்றஞ்சாட்டி இருந்தது. இலங்கை இராணுவத்திற்கு எதிரான இந்த குற்றச்சாட்டை இலங்கை அரசு மறுத்து வந்தது. இறுதிக்கட்ட போரின்போது இலங்கை அரசின் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமைகள் மீறல் குறித்த விசாரணை மற்றும் சமரச நல்லிணக்க முயற்சியில் முன்னேற்றம் இல்லாததை கண்டித்து அமெரிக்கா சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து தீர்மானங்கள் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

08 ஆம் பக்கம் பார்க்க...

மறவன்

**கடந்த வாரத்தொடர்ச்சி...**

அவ்வுரையின் இடையே அவர் குறிப்பிட்ட விடயம் யாதெனில்: எதிரியால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் குதிரை மற்றும் காலாட் கொரில்லாப் படைப்பிரிவுகளை அவசியம் உருவாக்கவேண்டும். எதிரிப் பிரிவுகளுடன் போரிடுவதற்காக பாலங்களைத் தகர்ப்பதற்காக வீதிகளில் குண்டுவைப்பதற்காக தொலைபேசி மற்றும் தந்தித் தொடர்புகளைச் சேதமாக்குவதற்காக காடுகளையும் பண்டகசாலைகளையும் விநியோகத் தொடர்களையும் எரிப்பதற்காக நாசகாரவேலைக் குழுக்களை உருவாக்க



நடைபெற்றது. குழுக்களைத் தயார்படுத்துவதற்கு ஒரு வாரத்திற்குக் குறைந்த நாட்களே ஒதுக்கப்பட்டன. ஆனால் 1930களில் இதற்காக 3 தொடக்கம் 6 மாதம்வரை செலவிடப்பட்டது.

18 யூலை 1941 அன்று ஜேர்மனியப் படைகளின் பின்புலத்தில் போராட்டத்தை ஒழுங்குபடுத்தல் பற்றிய அனைத்துக் கூட்டமைப்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் (பொல்சேவிக்) மத்திய குழுவினது கட்டளை வெளியானது. இதனுள் புத்திசாலித் தன்மையான விடயம் எதுவுமில்லை. பிரதானமானது யாதெனில் ஸ்பானியாவில் நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட கொரில்லாப்

ஆனால் ஸ்டாலின் இதற்கு உடன்படிவில்லை.

இறுதியில் 1941 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியில் உக்ரேன் பிரதேசத்தில் 738 கொரில்லாப் படைப்பிரிவுகளும் (கிட்டத்தட்ட 26000 பேர்) 191 நாசகாரவேலைக் குழுக்களும் இருந்தன. 1942 மார்ச் முதல் நாளன்று ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரேன் பிரதேசத்திற்குள் உருவாக்கப்பட்டு அனுப்பப்பட்ட 1974 கொலில்லாப் படைப்பிரிவுகளில் 241 மாத்திரமே சமர்ச் செயற்பாட்டைக் கொண்டிருந்ததெனத் தரவுகள் உள்ளன. 1942 யூன் 26 இல் உக்ரேனில் கணக்கிடப்பட்ட 778 கொரில்லாப் படைப்பிரிவுகளில் 22 மாத்திரமே செயற்பட்டன.(3310 பேர்)

இதைப்போன்றே பைலோரசியாவின் வடமேற்குத் திசையிலும் அர்லோ மாகாணத்திலும் கொரில்லாக்களின் செயற்பாடுகள் இருந்தன. (1941 ஆம் ஆண்டு யூலைக்கும் டிசம்பரிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கிட்டத்தட்ட 60000 கொரில்லாக்களும் நாசகாரர்களும் கொல்லப்பட்டனர் - தொகுப்பாளர் கருத்து)

கட்டளையத்தின் முரணான தோற்றப்பாடு.

1941 டிசம்பரில் பைலோரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழுச் செயலா

பைலோரசியாவில் 59 படைப்பிரிவுகள் மாத்திரமே செயற்பட்டன. ஏன் மேற்கு மாகாணங்களில் 1942 ஆம் ஆண்டு வசந்தகாலம்வரை கொரில்லாக்கள் இருக்கவேயில்லை (உக்ரேனில் 1942 ஓகஸ்டில் 4660 பேரைக்கொண்ட 32 படைப்பிரிவுகள்மாத்திரமேசெயற்பட்டன.) ஆனால் ஜனவரி மாத இறுதியில் உயர்பீடம் கொரில்லா அமைப்பின் மத்திய கட்டளையகத்தைத் தடைசெய்ய உத்தரவிட்டது.

இருந்தபோதும் 1942 ஆம் ஆண்டு மே 30 இல், கொரில்லா அமைப்பின் மத்திய கட்டளையகத்தையும் எதிரியால் கைப்பற்றப்பட்ட மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் தமக்குத் கீழ்ப்பட்ட கொரில்லா அமைப்பின் கட்டளையகங்களையும் உருவாக்குவதென்ற தீர்மானத்தை அரச தற்காப்புக் குழு எடுத்தது.

17 ஓகஸ்ட் 1942 இல் எதிரியின் போக்குவரத்துப் பாதைகளில் செயற்படுவதற்கான தனியான கண்ணிவெடிப் படை பற்றாலியன்களை உருவாக்குதல் பற்றிய கட்டளை, தற்காப்பிற்கான மக்கள் கமிசாரினால் பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும் இப்பற்றாலியன்களால் கொரில்லாக்களைப் போன்றே ஆக்கிரமிப்பாளர்களுக்கான வெடிபொருட்களதும் ஏனைய பொருட்களதும்

# கொரில்லாப்போரின் தவறுகள்

வேண்டும்.

நிபுணத்துவம்சார்ந்தபார்வையில் நோக்கினால் இது ஓர் அறிவற்ற செயலாகவிருந்தது. ஆக்கிரமிப்பிற்கு முன்பே கொரில்லாப் படைப்பிரிவுகளை உருவாக்கியிருக்க வேண்டும். இப்பொழுது யாருக்கு அவை தேவை. ஏன் கொரில்லாக்களால் விநி யோகத் தொடர்களை எரிக்கவும் பாதை களைத் தகர்க்கவும் முடியாமலிருந்தது. ஓர் ஒழுக்கமற்றநாசவேலையையேஸ்டாலின் இலக்காகக் கொண்டான். மாறாக உண்மையானதொரு கொரில்லாப் போரையல்ல. அவனது ஆணையில் அதாவது பிரதானமாக நடவடிக்கையின் அச்சு (பிரதான விநியோகத்திலிருந்து எதிரிப்படைகளைத் துண்டாடும் பணிகள்) எது என்பது இருக்கவில்லை. ஸ்டாலின் அல்லாமல் வேறு யாராவது கொரில்லாக்கள் காடுகளை எரிக்கவேண்டுமெனக் கூறியிருந்தால் அவனை இரகசிய ஒற்றன் என இரத்தம் சிந்தச் செய்திருப்பார்கள். காடுகளை எரிப்பதால் எதிரிக்குத்தான் நன்மையன்றி கொரில்லாக்களுக்கல்ல.

எமது படைகள் பின்வாங்கும்போது எடுத்துவர முடியாமலிருக்கின்ற சகல உணவுப் பொருட்களையும் அழித்துவிடுமாறு ஸ்டாலின் கோரினான். ஆனால் ஜேர்மனியர்களுக்கான விநியோகத்தில் இவை பலமான தாக்கமெதனையும் ஏற்படுத்தவில்லை. கொரில்லாக் குழுக்களின் சாப்பாட்டைப் பொறுத்தவரையிலே அவர்கள் மிகக்கடின நிலைமைக்கு ஆளாகினார்கள். போரின் முதல் மாத காலத்திலேயே எமது போர்வீரர்கள் கொரில்லாப் போரிற்குத் தயார்படுத்தப்படாத காரணத்தாலும் எதிரியின் பின்புலத்தில் என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்திராததனாலும் இலட்சக்கணக்கில் கைதியாகப் பிடிபட்டனர்.

ஸ்டாலினின் உரைக்குப் பின்னர் தீவிரமாக உச்ச அவசர அணித்தோற்றத்திற்கான ஆட்தெரிவும் நாசகாரவேலைக் குழுக்களுக்கான கொரில்லாப் படைப்பிரிவுகளுக்கான ஆட்களை அவசியத் தாயார்படுத்தலின்றி எதிரியின் பின்புலத்திற்குள் நகர்த்துவதற்கான செயற்பாடும்



படைப்பிரிவுகளது சிறப்புக் கட்டளையகத்தினூடான நிர்வாக அமைப்பிற்குப் பதிலாக கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் பாசிச ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராகச் சகல நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக எமது பொல்சேவிக் மறைமுகக் குழுக்களது வலையமைப்பை விரிவாக்குதல் என்பதேயாகும். ஆனால் மறைமுகக்காரர்களால் திரைப்படங்களில் மாத்திரமே கொரில்லா அமைப்புக்களை வழிநடத்த முடிந்தது. மறைமுகம் என்பது ஆபத்தானதாக இருந்தது. அத்துடன் கொரில்லா அமைப்புக்கள் தோன்றாத நிலையேற்படும் போது மறைமுகக்காரர்கள் அடிக்கடி பலியானார்கள்.

1941 ஆம் ஆண்டு யூலை மாதத்திலேயே அவ்சிய தயார்படுத்தலற்ற கொரில்லா அமைப்புக்களை எதிரியின் பின்புலத்திற்குள் அனுப்புவதைத் தடுத்து நிறுத்துமாறும் சிறப்பாகத் தெரிவுசெய்யப்பட்ட நுட்பமாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்களைக் கொண்டு சிறப்பு அமைப்பை உருவாக்கவேண்டும் எனவும் ஸ்பானியப் போரில் பங்குபற்றியவர்கள் யோசனை கூறினார்கள். அவர்கள் புகைவண்டிப் போக்குவரத்துக்களையும் பெருந்தெருக்களில் இரவு நேரப் போக்குவரத்துக்களையும் அடைக்கக் கூடியவர்களாகவும் பகல்நேரப் போக்குவரத்திற்குச் சிரமம் தருபவர்களாகவும் இருப்பார்கள். ஏனெனில் எதிரியின் தொடர்புப் பதைகள் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மிகவும் சாதகமான பிரதேசங்களினூடாகவே சென்றன.

ளரான பே.பனமரேன்காவை கொரில்லா அமைப்பின் மத்திய கட்டளையத்தை உருவாக்கும்படி ஸ்டாலின் பணித்தான். அரசியல்பணிஉறுப்பினரானபனமரேன்கா படைகளுக்குக் கட்டளையாளனாக இருந்ததில்லை. அத்துடன் இராணுவக் கல்விக்கூடப் படிப்பும் படிக்காதவன். கட்சியமைப்பின் பணியாளர்களது பரிந்துரைக்கேற்ப அவன் ஆட்களைத் தெரிவுசெய்யத் தொடங்கினான். பைலோரசியக் கொரில்லாக்களுக்கு பைலோரசியக் கட்டளையகத் தலைவன் பெ.கலினின் தலைமை வகித்தான். இவனை செஞ்சோலையின் பிளாட்ரூன் கூட நம்பியிருந்ததில்லை. சமர் நடவடிக்கைத் திட்டங்களின் பெறுபேறுகள் கட்சியமைப்பின் மாதாந்தத் துப்புரவு வேலைக்கான கட்டளைகளை நினைவுபடுத்தின.

உயர்பீடக் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு கொரில்லா அமைப்பின் மத்திய கட்டளையகம் மூர்க்கத்தனமான செயலூக்கத்தில் இறங்கியது. இதனது முதலாவது செயற்பாடாக எதிரியின் பின்புலத்திலுள்ள கொரில்லா அமைப்புக்களுடனான தொடர்புகளை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட்டது. பலம்வாய்ந்த மத்திய வானொலி அலைபரப்பு அலைவாங்கல் நிலையம் வேகமாக உருவாக்கப்பட்டதுடன் வானொலிப் பள்ளிகளும் பரவத்தொடங்கின.

1942 ஆம் ஆண்டு ஜனவரி வரை கொரில்லாப் படைப்பிரிவுகளின் நடவடிக்கைகளுக்குச் சாத்தியமான சூழ்நிலையைக் கொண்டிருந்த

விநியோகத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

செப்டெம்பர் 5,1942 இல் கொரில்லா அமைப்பின் மத்திய கட்டளையகத்தால் தயார்படுத்தப்பட்டகொரில்லாஅமைப்பின் பணிகள் பற்றிய ஸ்டாலினின் கட்டளை வெளியானது. பணிகள் நிறைய இருந்தன. ஆனாலும் பிரதானமானது - விநியோகப் பாதைகளை அடைத்தல். ஏனையவர்கள் மத்தியில் பணி பரவத்தொடங்கியது.

1 942 ஆம் ஆண்டு செப்டெம்பர் 6 ஆம் திகதி கொரில்லா அமைப்புக்களின் பிரதான கட்டளையாளன் பதவி கே.வரசிலவ்விற்கு வழங்கப்பட்டு நியமிக்கப்பட்டது. ஆனால் 19 நவம்பர் 1942 இல் கொரில்லா அமைப்பின் பிரதான கட்டளையாளன் பதவி இரத்துச் செய்யப்பட்டது.


1943 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பிரியான்ஸ்க் பேரரங்கில் முன்னேறித் தாக்குதல் நடவடிக்கை ஆரம்பமானது. விரைவில் பைலோரசியா மீட்கப்பட்டுவிடுமெனக் கருதப்பட்டது. ஆகவே மார்ச் 7 1943 இல் மீளவும் கொரில்லா அமைப்பின் மத்திய கட்டளையகம் இரத்துச் செய்யப்பட்டது. ஆனால் முன்னேறித் தாக்குதல் திண்டாட்டம் கண்டது. ஜேர்மனியர்கள் சிமலேன்ஸ்கையும் அரியோலையும் தக்கவைத்துக்கொண்டனர். 17 ஏப்ரல் 1943 இல் கொரில்லா அமைப்பின் மத்திய கட்டளையகம் மீள உருவாக்கப்பட்டது. ஆனால் இதற்கு கொரில்லா அமைப்பின் உக்ரேனியக் கட்டளையகம் (இதுவே மோல்டாவையும் தலைமைவகித்தது) கீழ்ப்பட்டிருக்கவில்லை.

1943 இன் கோடைகாலத்தில் 120000 இற்கு மேற்பட்ட ஆட்தொகையைக் கொண்ட சோவியத் கொரில்லா அமைப்புகள் தலைமைத்துவத்துடன் திடமான வானொலித் தொடர்புகளைக் கொண்டிருந்தன. அவர்களது செயற்பாடுகளைச் சரியாகத் திட்டமிட்டு அவர்களுக்கு அனுப்புவதற்காக இரண்டு தொன் வெடிப்பொருட்களும் தயாராகவிருந்தால், இவற்றைக் கொண்டு கிட்டத்தட்ட மூன்று மாதகாலத்திற்கு 12000 இற்குட்பட்ட... **தொடரும்...**

**நெற்றிப்பொறியன்**

# பிராந்தியச் செய்திகள்

## பாரிய கொள்கலன்களை கையாளும் இறங்கு தளம்



கொழும்புத் துறைமுகத்தில் தெற்கு 'கெண்டெயினர்' (கொள்கலன்) இறங்கு தளம் இரண்டு வருட கட்டுமானப் பணிகளின் பின் பூர்த்தியாகியிருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. 'சைனா மேர்ச்சண்ட்ஸ் ஹோல்டிங்' என்ற சீன நிறுவனமே முதலீடு செய்து, முகாமை செய்யவுள்ள இந்த இறங்கு தளம், இதனைக் கட்டி 35 வருடங்களுக்கு செயற்படுத்தும் அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ளது.

35 வருடங்களுக்குப் பின்னர் அது இலங்கை துறைமுக அதிகார சபைக்கு முழுமையாகக் கையளிக்கப்படும். 'சைனா மேர்ச்சணட்ஸ் ஹோல்டிங்', எய்ட்கன் ஸ்பென்ஸ் நிறுவனம், இலங்கை துறைமுக அதிகார சபை ஆகிய மூன்றும் இணைந்து கொழும்பு சர்வதேச 'கெண்டெயினர்' இறங்கு தளத்தைக் கையாள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இந்தத் தளத்தில் மட்டுமே 'மெகா' அளவு 'கெண்டெயினர்'களையும் ஏற்றி, இறக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மண்டூரில் இரு பிள்ளைகளின் தந்தை தற்கொலை



மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூரில் தூக்கில் தொங்கிய நிலை யில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். புதன்கிழமை இரவு மண்டூர் மாணிக்கப் பிள்ளையாரடி வீதியை சேர்ந்த சாம்பசிவம் கருணானந்தம் (39வயது) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடன் தொல்லை காரணமாக தூக்கில் தொங்கியுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர். சடலம் நீதிவானின் உத்தரவுக்கமைய மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணையை வெல்லவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆலயங்களை புனரமைத்துத்தருமாறு கோரிக்கை

மலையக பெருந்தோட்ட பகுதியில் 90 சதவீதமான இந்து ஆலயங்கள் புனர்நிர்மாணப் பணிக்காக தகர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஆலயங்களில் ஒருசில 185 ஆண்டுகள் பழமைவாய்ந்தவையும் உண்டு.

அவ்வாறான ஆலயங்கள் இன்னும் 10 வீதம் உள்ளது. அவ்வாறான ஆலயங்களைத் தகர்க்க இந்து சமய கலாசார திணைக்களம் மற்றும் சமய கலாசார அமைச்சு முன்வந்து இடமளிக்கக்கூடாது.

பலங்கால ஆலயங்களில் அக்கால மக்கள் பெருமதி வாய்ந்த தங்கம், பவளம், முத்து, வைரம் போன்ற பொருட்கள் போடப்பட்டு சுவாமி சிலையையும், அத்திவாரத்தின் கீழ்பகுதியிலும் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது கட்டப்படும் ஆலயம் ஒன்று சுமார் 50 இலட்சம் முதல் 2 கோடி ரூபாய் வரை செலவு செய்கின்றனர். அவ்வாறு செலவு செய்து ஆலயங்கள் அமைத்தபோதும் முறையான பூஜைகள் இடம் பெறுவது கிடையாது. பிராமண குருமார்கள் இல்லாத குறை நிலவி வருகின்றது.

மேலும் 90 சதவீத ஆலயங்கள் 50 சதவீத வேலை பூர்த்தியுடன் மேலதிக வேலை செய்யாமல் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறு கைவிடப்பட்ட ஆலய நிர்வாகம் தோட்ட மக்களிடம் அறவிடும் பணத்தை சூறையாடுவதாக பெருந்தோட்ட மக்கள் புகார் தெரிவிக்கன்றனர்.

ஒரு தொழிலாளியிடம் இருந்து மாதாந்த வேதணத்தில் 2 நாட்கள் ஊதியத்தை வழங்குவதாக தெரிவிக்கின்றனர். ஆனால் வருட கணக்காக ஆலய பணி நிறைவு செய்யாமல் உள்ளதாக மிகவும் மன வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

ஒருசில தோட்டங்களில் ஆலய பணி நிறைவு பெற்று கும்பாபிஷேகம் இடம் பெற்றாலும் அவர்கள் சேகரித்த பணம் மற்றும் தோட்டத் தொழிலாளர்களிடம் பெற்ற பணம் போன்றவற்றிற்கு வரவு செலவு காட்டவில்லை என சாமிமலை பகுதியை சேர்ந்த தோட்ட தொழிலாளர்களும் மஸ்கெலியா பகுதியை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் செலவு விபரம் கேட்கின்றனர்.

பரிபாலண சபையினரோ கும்பாபிஷேகம் நிறைவு பெற்று வருடங்கள் கடந்தாலும் பொது கூட்டம் வைப்பதில்லை எனவும் பொதுகூட்டம் ஒன்றை நடத்தி மக்களுக்கு கணக்குகள் காட்ட வேண்டுவதுடன் புதிய நிர்வாக சபையை உருவாக்கவும் வேண்டும் எனவும், தொழிற்சங்க ரீதியில் ஆலயத்தை கொண்டு நடத்தாமல் இந்துக்களின் ஆலயம் என கருதி அனைவரையும் இணைத்து செயற்பட முன்வரவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த இரண்டு பகுதியை தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான நிலை தோன்றியுள்ளது. கட்டப்படவேண்டிய ஆலயங்களை உடன் கட்டவும், புதிய ஆலயங்கள் அமைப்பதை தடுக்கவும் கலாசார அமைச்சு முன்வரவேண்டும். அத்துடன் இவ்வாறான ஆலயங்களின் கணக்குகளை உடன் பரிசீலனை செய்யவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

– மஸ்கெலியா நிருபர் –

## பளை இரயில் விபத்தில் ஒருவர் பலி



பளை ரயில் நிலையத்திற்கு அருகில் இரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து இரவு இடம்பெற்றுள்ளது. ரயில் கடவையில் பணியாற்றும் 26 வயதான தங்கராசா சாந்தகுமார் என்ற ஒருபிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் பளை இத்தாவில் பகுதியைச் சேர்ந்தவர் என எமது கிளிநொச்சி செய்தியாளர் தெரிவித்தார். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மட்டு வாகரை கதிரவெளியில் ஒருவர் பலி



மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதிரவெளியில் காலை கன்டர் ரக வாகனம் ஒன்று துவிச்சக்கர வண்டி மீது மோதியதில் துவச்சக்கர வண்டியில் சென்றவர் ஸ்தலத்திலேயே உயிரிந்தார். காலை 6 மணியளவில் திருகோணமலை, மட்டக்களப்பு பிரதான வீதியில் கதிரவெளி, பால்சேனை பாடசாலைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் கதிரவெளியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்வம் புலேந்திரன் (35வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர். மீன் வியாபாரியான இவர் நிலக்கண்ணிவெடியில் ஒரு காலின் விரல்களை இழந்தவர்.

காலை மீன் எடுப்பதற்காக சென்று கொண்டிருந்தபோது வன்னியில் இருந்து வாழைக்காய் கொண்டு வந்த லொறி இவர் மீது மோதி சுமார் 300 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். ஸ்தலத்திலேயே உயிரிழந்த இவரது சடலத்தை பொலிஸார் மீட்டு வாழைச்சேனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். இது தொடர்பில் கன்டர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் வாகனமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

06 ஆம் பக்கத் தொடர்ச்சி...

சர்வதேச விசாரணை

இந்த நிலையில், இலங்கை அரசின் போர்க்குற்றம் குறித்து சர்வதேச அளவிலான விசாரணை தொடங்க வேண்டும் என்று, ஐ.நா. மனித உரிமைகள் குழு தலைவர் நவிபிள்ளை, ஐ.நா.சபைக்கு பரிந்துரை செய்து இருக்கிறார். இது தொடர்பாக 74 பக்க அறிக்கை ஒன்றை அவர் இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும், அந்த அறிக்கைக்கு முறைப்படி பதில் அளித்து இருப்பதாகவும், ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டு இருக்கிறது.

நவிபிள்ளையின் பரிந்துரைகளில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை ரத்து செய்வது, காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணை, சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக வழக்கு தொடருவது போன்றவை முக்கியமானவையாகும். இந்த பரிந்துரை குறித்து இலங்கை அரசின் வெளியுறவுத்துறை சார்பில் இதுவரை அதிகாரபூர்வமாக எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

3வது தீர்மானம்

இதற்கிடையில் அமெரிக்கா சார்பில், ஐ.நா.மனித உரிமைகள் கவுன்சிலில் அடுத்த மாதம் இலங்கை அரசின் போர்க்குற்றத்துக்கு எதிராக 3வது கண்டன தீர்மானம் தாக்கல் செய்யப்படுகிறது. கடந்த இரு ஆண்டுகளாக தாக்கல் செய்யப்பட்ட தீர்மானங்களை இந்தியா ஆதரித்து இருந்தது.


ஐ.நா.மனித உரிமைகள் குழு, விடுதலைப்புலிகள் ஆதரவு இயக்கத்தின் தூண்டுதலால் விதிமுறைக்கு மாறாக இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாக இலங்கை அரசு குற்றம் சாட்டி வருகிறது. அமெரிக்காவின் இந்த தீர்மானத்தால் சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு வழிவகுத்துவிடும் என்ற அச்சம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டு உள்ளது. இங்கிலாந்து அரசும் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் தருஸ்மன் நம்பிக்கை என கூறியுள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், தருஸ்மன் கலந்துக் கொண்டிருந்தார்.

இதன் போது தருஸ்மன் தலைமையிலான நிபுணர்கள் குழு மேற்கொண்ட விசாரணைகளின் வெற்றித் தன்மை தொடர்பில் இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பி இருந்தனர். தமிழ் மக்களுக்கு படிப்படியாக நீதி கிடைக்கும் என்று, இறுதி யுத்தம் தொடர்பில் ஜக்கிய நாடுகளின் பொது செயலாளருக்காக விசாரணை நடத்திய நிபுணர்கள் குழு வின் தலைவர் மர்சூக்கி தெரிவித்துள்ளார்.

இதற்கு நேரடியாக பதிலை வழங்காத தருஸ்மன், கம்போடிய மக்களுக்கு நீதி கிடைக்க தாமதமான போதும், கட்டம் கட்டமாக அது கிடைக்க செய்யப்பட்டதாக தெரிவித்தார். இதன் மூலம் அவர் தமிழ் மக்களுக்கும் கட்டம் கட்டமாக நீதி கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஒட்டுமொத்தமாக இவ்வமைப்புக்களின் நிலைப்பாடுகள் தமிழ் மக்களை சார்ந்தவையாக அமைந்துள்ள போதிலும் அரசாங்கத்துடன் நேரடியான நட்புறவையும் பெற்றிருக்கின்றார்கள் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.




## சித்த வைத்தியராகும் பரத்



பரத் 555 என்ற வெற்றி படத்தை கொடுத்து நீண்ட இடைவேளிக்கு பிறகு நடிக்கும் படம் "ஐந்தாம் தலை முறை சித்த வைத்திய சிகாமணி" இப்படத்தை எல்.ஜி.ரவிசந்தர் என்பவர் இயக்குகிறார். இப்படத்தில் பரத் சித்த வைத்தியராக நடிக்கிறார்.

இதனால் பரத் கொல்லிமலையில் உள்ள சித்த வைத்தியர்களை சந்தித்து அவர்கள் பயன்படுத்தும் வார்த்தை, பழக்க முறை போன்றவற்றை கூர்ந்து கவனித்து வருகிறார். இப்படம் ஒரு குடும்ப சித்திரமாக வர உள்ளது. பழனி மற்றும் பொள்ளாச்சியில் படமாக்கப்படவுள்ளது.

இப்படத்தில் "அட்டகத்தி" நந்திதா கதாநாயகி வேடம் ஏற்க உள்ளார். மேலும் 20 நகைச்சுவை நடிகர்கள் நடிக்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியலில் அலைபாயுதே நாயகன்



"பெண்கள் நெஞ்சை கொள்ளை கொண்ட வெள்ளை மாதவா" என்ற வரிகளுக்கு பொருத்தமாக நிறைய பெண் ரசிகைகளை கொண்ட ஒரு நடிகர் தான் மாதவன். இவர் திடிரென்று அரசியல் பேசியுள்ளார்.

மாதவன் கடைசியாக நடித்த படம் லிங்குசாமி இயக்கிய "வேட்டை"இது கடந்த 2012ம் ஆண்டு வெளிவந்தது. இவர் தமிழ் மட்டும் இன்றி ஹிந்தியிலும் நடித்து வருகிறார். கமல்ஹாசன், அமீர் கான், மணிரத்னம் போன்ற ஜாம்பவான்களுடன் பணியாற்றி இருக்கிறார். இவர் தனது ட்விட்டர் வலைதளத்தில் அரசியல் சார்ந்த கருத்தை பேசியுள்ளார்.

அவர் கூறியது "இது தான் சரியான நேரம் நாட்டின் வன்முறையை நீக்கி நாகரிகமாக்க இதுவே சிறந்த தருணம், இதை நீங்கள் தான் காட்ட வேண்டும்"என்று குறிப்பிட்டுள்ளார்.

"மேடி" க்கும் "மோடி மோகம் வந்து விட்டது போல".


## விஸ்வரூபத்திற்கு பிறகு சைவம்



இயக்குனர் விஜய் இதுவரை அஜித், விஜய், விக்ரம் போன்ற பெரிய நடிகர்களிடம் மட்டுமே பணியாற்றி உள்ளார். இவர் முதன்முறையாக எந்த நடிகர் பட்டாளமும் இல்லாமல் "தெய்வதிருமகள்" சாராவை வைத்து இயக்கி முடித்து இருக்கும் படம் தான் "சைவம்". இதுவரை இவர் எடுத்த எல்லா படமும் ஏதோ ஒரு படத்தின் தழுவல் என்ற கூறப்பட்டது. இதை மாற்றும் விதத்தில் தன் கனவு படமான சைவத்தை இயக்கியுள்ளார்.

மேலும் இப்படத்தில் ஹொலிவூட் படங்களில் பணியாற்றிய மார்ட்டி ஹம்ப்ரே, க்ரிஸ் ஜேக்கப்ஸன் என இரண்டு சவுண்ட் இன்ஜீனியர்கள் இந்தப்படத்தில் பணியாற்றியுள்ளனர். இதற்கு முன் இவர்கள் இருவரும் கமலின் விஸ்வரூபம் படத்திலும் பணியாற்றியவர்கள். அவர்களும் விஸ்வரூபம் போன்ற படத்திற்கு வேலை செய்து விட்டு, இப்படத்திற்கு வேலை செய்வது புதிய அனுபவமாக உள்ளது என கூறியுள்ளனர்.

## எமி ஜக்சனின் புதிய காதலன்



எமி ஜக்சன் "மதராசபட்டிணம்"படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுக மாகி இளைஞர்கள் மனதை கொள்ளை கொண்டவர்.

இதனை தொடர்ந்து "தாண்டவம்" படத்தில் நடித்தார், அதை முடித்த கையோடு ஷங்கர் இயக்கும் பிரம்மாண்ட படமான "ஐ"படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக நடித்து கொண்டு இருக்கிறார்.

இந்நிலையில் நீண்ட நாள் மறைத்து வந்த தன் காதலனை எமி சொல்லாமல் சொல்லியுள்ளார்.

எமி ஒரு பிரிட்டிஷ் மாடல் என்பது அனைவரும் அறிந்ததே. இவர் தமிழ் மட்டும் இன்றி ஹிந்தியிலும் நடித்துள்ளார். அந்நேரத்தில் அப்படத்தில் நடித்த நாயகனிடம் கிசு கிசுக்கப்பட்டார். ஆனால் கொஞ்ச நாட்களிலேயே அது கசந்து போனது. இப்போது அவர் பிரிட்டிஷ் நடிகர் "ரியான் தோமஸ்" என்பவரிடம் காதல் வயப்பட்டதாக கூறப்படுகிறது.

இதை அவரும் மறுக்கவில்லை. அவருடன் தான் சேர்ந்து நிற்கும் படத்தை ட்விட்டர் இணையதளத்தில் மகிழ்ச்சியாக வெளியிட்டுள்ளார்.

"துரை அம்மாவுக்கு ஒரு துரை தான் கணவர் என்பது விதி"

தினப்புயல் பத்திரிகை மற்றும் தினப்புயல் இணையத்தளத்தில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க இன்றே முந்திக்கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு :- 024 2227558

## பாட்ஷா பாணியில் அஞ்சான்




சூர்யா தற்போது நடித்து கொண்டிருக்கும் அஞ்சான் படத்தை லிங்குசாமி இயக்கி வருகிறார். லிங்குசாமி ரஜினியின் தீவிர ரசிகர் என்று எல்லோருக்கும் தெரியும். அவர் பாட்ஷா மாதிரி ஒரு படம் எடுத்தால் தான் என் மனம் நிம்மதி அடையும் என்று அவரே ஒரு பேட்டியில் சொன்னார். அதற்கு காலம் வந்து விட்டது.

அஞ்சான் படம் தற்போது மும்பையில் படமாக்குகின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே, ஆனால் இதில் ருசிகர தகவல் என்னவென்றால் இது அப்படியே "பாட்ஷா" படத்தின் தழுவல் என்று சொல்லப்படுகிறது. அதில் ரஜினி சாதாரண மாணிக்கமாக இருந்து தன் நண்பர் கொலை செய்ய படுவதை கண்டு "பாட்ஷா"வாக விஸ்வரூபம் எடுப்பார்.

அதே போல் தான் இதிலும் சூர்யா தன் நண்பர் கொலைக்காக பழி வாங்குகிறார். இதில் இவர் நண்பனாக நடிப்பது "துப்பாக்கி" வில்லன்" வித்யு ஜம்வால்" தான். ஹிந்தி நடிகர் மனோஜ் பஜ்பாய் ரகுவரன் கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

மேலும் இப்படத்தில் சமந்தா முதன்முறையாக சூர்யாவுடன் கைகோர்த்துள்ளார். இதில் சூர்யா இரட்டை வேடம் என்பது குறிப்பிடத்தக்கது.

## விஜய் – அமலாபால் ஜோடி சேர்கிறார்கள்



நடிகை அமலா பாலும் இயக்குனர் ஏ.எல்.விஜய்யும் ஒருவரை ஒருவர் பல நாள் காதலித்து வந்தனர். அதை இரண்டு பேரும் மறுத்து வந்த நிலையில் சமிபத்தில் அமலா பால் நாங்கள் காதலிக்கிறோம், இது பற்றி முறைப்படி தகவல் விஜய் அறிவிப்பார் என்று கூறினார்.

இப்போது கூடுதலாக ஒரு தகவல் இவர்களின் நிச்சயதார்த்தம் ஜுன் 7ம் திகதி நடக்கவுள்ளது. அதை கேரள முறைப்படி தான் நடத்த வேண்டும் என்று அமலா பால் கூறியுள்ளார். விஜய்யும் இதற்கு சமதித்துள்ளார். இதை தொடர்ந்து இவர்களின் திருமணம் ஜுன் 12ம் திகதி சென்னையில் நடக்கவுள்ளது.

## பட வாய்ப்பை நழுவவிட்ட ஜீவா



ஜீவா, நயன்தாரா நடிப்பில் இயக்குனர் எஸ்.பி. ஜனநாதன் இயக்கிய ஈ படம் எதிர்பார்த்த படி வெற்றி பெறவில்லை என்றாலும் அவருடைய பேராண்மை படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த படத்திற்கு பிறகு தற்போது ஆர்யா மற்றும் விஜய் சேதுபதியை வைத்து புறம்போக்கு படத்தை இயக்கி வரும் ஜனநாதன், மூன்று ஹீரோக்களில் ஒருவராக நடிக்க ஜீவாவை கேட்டிருக்கிறார்.

ஏற்கனவே இரண்டு பேர் நடித்து வரும்போது மூன்றாவது கேரக்டருக்கு அப்படி என்ன முக்கியத்துவம் இருக்க போகிறது என்று நினைத்து அப்பட வாய்ப்பை தவிர்க்க கால்ஷீட் இல்லை என்று சொல்லி மறுத்து விட்டார் ஜீவா.

இப்போது அப்படி சொன்னதற்காக பீல் பண்ணிட்டு இருக்கிறாராம் ஜீவா. என்னவென்றால் முதலில் ஆர்யா, விஜய்சேதுபதிக்கே முக்கியத்துவம் இருப்பதாக கதை சொன்ன இயக்குனர், தற்போது ஜீவாவுக்கு பதிலாக ஷாம் நடிக்கும் அந்த வேடத்திற்கு, அவர்களுக்கு இணையான வேடமாக மாற்றி விட்டாராம்.

## தமிழில் களமிறங்கும் கதாநாயகிகள்



ஹொலிவூட்டில் டொப் நாயகிகளாக இருந்த வைஜயந்திமாலா பாலி, ஹேமமாலினி, ஸ்ரீதேவி போன்ற நாயகி கள் பொலிவூட்டில் ஆதிக்கம் செய்ததை நாம் மறந்திருக்க முடியாது.

ஹொலிவூட் நாயகிகள் பொலிவூட்டில் நடிப்பது போய், இப்போது பொலிவூட் நாயகிகள் ஹொலிவூட்டிற்கு வர ஆரம்பித்துள்ளனர்.

தற்போது டாப் நாயகிகளாக பாலிவுட்டில் இருந்து வரும் தீபிகா படுகோனே, ஐஸ்வர்யா ராய், சோனாக்ஷி சின்ஹா, யாமி கௌதம் போன்ற நாயகிகள் தமிழில் நடிக்க இருக்கின்றனர்.

ஐஸ்வர்யா ராய் ஏற்கெனவே தமிழில் அறிமுகமாகியவர், அவரை தொடர்ந்து தீபிகா படுகோனே கோச்சடையான் படத்திலும், சோனாஷி சின்ஹா, கே.எஸ். ரவிக்குமார் இயக்கும் புதிய படத்திலும், யாமி கௌதம், ஜெய்க்கு ஜோடியாக தமிழ் செல்வனும் தனியார் அஞ்சலும் என்ற படத்திலும் நடிக்க இருக்கின்றனர்.

இதில் இருந்து என்ன தெரிது தமிழ் சினிமா வளந்திடுச்சுன்னு தெரியுதே.



# கவிதைப் பூங்கா



## ஊமைவிழிகள்

கனவுகளும் நினைவுகளும்
கானல் நீராகிப் போனது
இரவு நேரத்தின் பனிக்கட்டிகள்
கதிரவன் வரவால்
உருகிப் போனது

உள்ளத்தில் வெடிக்கும்
காதல் எரிமலை
தீ பற்றி எரிகிறது
துளிர் விட்ட காதல் மலர்
கருகிப் போனது

அன்பும் ஆசையும்
பெருகி வர
கேளாமல்
பறித்துக்கொண்டு போனாள்
என் இதயத்தை

காலநேரம்
அவளுக்கு பகையானதால்
பாதி வழியில்
முட்கம்பிக்குமேலே
தொங்கவிட்டாள் இதயத்தை

சிந்துகின்ற
சிவந்த இரத்தத்தின்
ஒவ்வொரு துளியிலும்
அவளின் முகம்
கலர் படமாக
காட்சிதரும்
அந்த நிமிடத்தில்
என் - விழிகளிரண்டும்
ஏனோ
ஊமையாகிப்போனது

வீ.அருள்ராஜா
வவுனிக்குளம்

## நொந்து நூலானேன்

நான் நொந்து நூலானேன்
நீ என்னை விட்டுப்
பிரிந்தால் அல்ல - மாறாக
நீ என்னை விட்டுப்
பிரித்துச் சென்ற - என்
குழந்தைகளால்

சு.தேவகுமார்
செட்டிகுளம்

## உதடுகள்


பொய்களை மட்டுமே
உச்சரித்துப்
பழகிப் போனதால்
உளர்ந்து போன
சருகுகளாய்...!
திரைமறைவுத் திட்டங்களில்
தேர்ச்சிப் பெற்ற
தொண்டர்களிடம்
விலங்கிடப்பட்ட
கைதிகளாய்...!
பேசமுடியாத பிறவியோடு
படைக்கப்பட்டிருந்தால் கூட
பரவாயில்லை
இந்த
இருள் கொண்ட
இதயங்களின்
ஈக்கள் மொய்க்கும்
புழுகுகளை
எடுத்துப் போட்டே
இழந்துபோனேன்
இனிமைகளை...

கு.தவசீலன்
பளை

## கடிதம்

இந்த வெற்று பேப்பர் தனில்
பேனா மை கொண்டு எழுதாமல்
உதிரம் கொண்டெழுத நினைத்தேன்
முடியவில்லையடி என்னால்
என் உதிரம்தனை குடித்துவிட்டு
நீயோ பறந்துவிட்டாய் பலதூரம்
அதனால்தான் இக்கவிதனை
எண்ணீர் கொண்டு எழுதாமல்
பேனா மை கொண்டு எழுதுகிறேன்
கண்ணீரும் தெரியாதென்பதனால்

மட்டுநகர் கண்ணா
அடம்பன்



மறைவதாய் கூறி
அவள் கண்ணில் படும்படி
தெளிவாய் நான் ஒளிய
என்னைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியில்
என் கால்களை கட்டிக்கொண்டு
குட்டி தேவதையாய் அவள் சிரித்தபோது...
மீண்டும் ஒருமுறை
தோற்க விரும்பினேன்
அவளின் வெற்றிக்காக

உன்னையும்
என்னையும்
சுற்றி
ஆயிரம்
பேர்
இருந்தாலும்.

நம்
நினைவுகளைச்
சுற்றி
அதிசயங்களே
இருக்கின்றன
நாம்
சுற்றிய
இடம்மெல்லாம்!.

## நீ


அழுவது நீயாகட்டும்
துடைப்பது நானாகட்டும்
உறவு தேவையில்லை
உரிமை தேவையில்லை
கண்ணீரைத் துடைப்பதற்கு
அன்பு மட்டும் போதும் !
அன்பு இருந்தால்
கல்லையும் கரைக்கலாம்
பசும் புல்லிலும்
கடவுளைக் காணலாம் !

பாஸ்கரன் கதீஷன்





# புனைகதைப் புயல்



வதனா அப்படியே மயக்கமடைந்து சரிந்தாள். நல்லவேளை அருகில் இருந்ததால் நிலத்தில் விழுந்துவிடாது கிட்டப்போய் தாங்கிப்பிடித்துக் கொண்டான். தமிழ் இவன்மடியில் நித்திரையாகியிருந்ததால் அவளைத் தாங்கிக்கொள்வதில் சிரமமாக இருந்தது. அருகிலிருந்த வயதான ஒருவர் பிள்ளையை வாங்கி தன் மடியில் நித்திரையாக்கினார். முதலில் அவளை தன் தோளோடு சாய்த்தவன் மெல்ல மடியில் படுக்கச்செய்தான். பக்கத்திலிருந்த அந்த அம்மா தண்ணீர்ப் போத்தலைத் திறந்து

...யில் பல வகையிலும் உதவியவன் அவளைப்பலர் திருமணம் செய்யும்படி கட்டாயப்படுத்தி கஸ்ரப்படுத்தியபோது தானே திருமணம் செய்வதாக கூறி நெற்றியில் குங்குமம் சூட்டிவிட்டவன். உண்மையைச்சொன்னால் அவள் மனதில் தற்போது நிறைந்திருப்பவன், அவன்மடியில் படுத்திருப்பதற்கு விருப்பமிருக்காதா என்ன? ஆயினும் அவளால் தொடர்ந்து படுக்க பயமாக இருந்தது. மாமியார் வந்துவிட்டால் இப்பொழுதே பூகம்பமாகிவிடும் அவனுடன் கதைத்து அவனின் உதவிகளைப்பெறும் சந்தர்ப்பம்கூட இல்லாமல்போய்விடும்எனப்பயந்தாள்.

"அப்பாடா... எங்க தண்ணிப்போத்தல்."

வந்ததும் வராதுமாய் கேட்டு வாங்கி அண்ணாந்து அரைப்போத்தல் தண்ணியை அப்படியே குடித்து விட்டு பெருமூச்சை விட்டாள். அதன்பின்னர்தான் மருமகள் பயணப்பையின் மீது படுத்துறங்குவதை கண்டாள். கடுமையாக வியர்த்து அவள் , அணிந்திருந்த பஞ்சாபி நனைந்து உடலோடு ஒட்டியிருந்தது. ஏதோ அவளுக்கு பிரச்சினை என்பதனைப்புரிந்து கொண்டாள்.

தொடர் – 53

பதட்த்துடன் திரும்பி ஒருகை யால் மருமகளின் தலையப்பிடித்து மறுகையால் தாங்கிப்பிடித்தாள். ஓங்கழித்தபோதும் சத்தி வரவில்லை. தொண்டையை அடைத்தது போல அந்தரப்பட்டாள். மருமகளின் நெஞ்சைத்தடவி விட்டவள்

"தண்ணிகொஞ்சம் குடியம்மா.."

என்று கூறினாள். அப்போது அருகிலிருந்த பெண்கள்

# முள்ளிடை முகிழ்த்த மலர்

## அன்னக்கிளி

கொடுத்து...

"தம்பி... முகத்துக்கு தண்ணியதெளி... பிள்ளை சரியாய் களைச்சுப்போட்டுது..."

தண்ணீர்ப்போத்தலை வாங்கி அவள் முகத்தில் தெளித்து விட்டதுடன் முகத்தை வருடிவிட்டான். கண்விழித்தவள் அவன் முகத்தைப் பார்த்ததும் எழும்ப முயற்சித்தாள். எழும்ப முடியவில்லை. களைப்பால் வாடியிருந்தவளின் தலையை தடவிவிட்டவன்..

"தண்ணி குடியுங்கோவன்.."


அவளால் எழும்ப முடியாத தால் அப்படியே படுத்தபடி வாயைத்திறந்தாள். தண்ணிப் போத்தலைச்சரித்து கொஞ்சம் கொஞ்சமாக பருக்கினான். அப்போதுதான் அவளுக்கு உயிர் வந்தது போல் இருந்தது. தலை விண்ணென்றிருந்தது.

அவன் தடவிவிட்டபோது சுகமாக இருந்தது. அதை உணர்ந்து அவனும் தலையை பிடித்து விட்டான். அவளுக்கு சுகமாக இருந்தபோதும் அவனது மடியில் படுத்திருப்பது சங்கடமாக இருந்தது. 'மாமியார் வந்துவிட்டால்' ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நினைக்க பயமாக இருந்தது. அப்படியே இரண்டு கைகளாலும் அவன்கையை இறுகப்பிடித்து கன்னத்தோடு அழுத்திக்கொண்டாள். சில நொடிகளில் அவள் உடம்புக்கு தெம்பு வந்துவிட்டது போல இருந்ததால் எழும்பி உட்கார்ந்தாள்.

உடம்பெல்லாம் ஏதோமாதிரியிருந்தது. களைப்பாக இருந்தபோதும் அவ னின் அணைப்பு பெரும் சுகத்தை கொடுத்தது.

"ஏன் பிள்ளை எழும்பினனி படன்... களைப்பாயிருக்கிறாய்... கொஞ்சநேரம் படுத்தால் சுகமாகீடும்."

பக்கத்திலிருந்த வயதான பெண்மணி கேட்டாள். அவளுக்குமட்டும் எழும்ப விருப்பமா? ரவியைப்பிரிந்தது முதல் தனிமையில் தவிக்கும் அவளுக்கு அண்ணி என்ற வகை...



சட்டென எழுந்து உட்கார்ந்தாள். அவனையே வைத்தகண்வாங்காது பரிதாபமாக பார்த்தாள். அப்பார்வை அவனுக்கு ஆயிரம் கதைகளை கூறியது.

"என்ன தண்ணி குடிக்கப்போறியளா?" என்றான்.

"இம்.."

என்று தலையைமட்டும் ஆட்டினாள். தண்ணீர்ப்போத்தலை கொடுத்தான். வாங்கி மடமடவென குடித்தாள்.

"என்ன செய்யுது.. மருந்தெடுப்பமே..."

"வேண்டாம்... களைப்பில... தான்....இப்ப ஒண்டும் செய்யேல்லை. தலை தான் ஒருமாதிரி இருக்கு."

"பனடோல் போடுங்கோவன்... சோடா வங்கியரட்டே...?"

"வேண்டாம் ... பனடோல் போட்டுட்டன். இனிச்சுகமாயிடும்..."

"பாக்கில தலைய வைச்சு படுங்கோ... இப்ப அம்மா வந்திடுவா."

சிறிது நேரம்கழித்து வந்தார். இவளை விட அவர் கடுமையாக களைத்திருந்தார். ஆயினும் தோட்டத்தில் களைக்கக்களைக்க வேலைசெய்து உழைத்த உடம்பு என்பதால் திடகாத்திடமாக நடந்து வந்தார்.

"என்ன ஏன் பிள்ளைக்கு என்ன செய்யுதாம். ஏன் படுத்திருக்கிறாள்."

பதட்டப்பட்டாள்.

"தலையச்சுத்துதாம்.... சத்தி எடுத்தவள். தலைய சுத்துதெண்டு பாக்குக்கு மேல படுத்திருக்கிறாள்."

"என்னைக் கூப்பிட்டிருக்கலாம் தானே..."

"சத்தி எடுக்க அப்பிடியே விட்டுட்டு வாறதே..."

"தமிழ் என்ன நித்திரையே..."

"இம்... அவள் படுக்கட்டும் கொஞ்சநேரத்தால எழுப்பலாம்... பதிவு என்னவாம்.."

"என்னத்தை... பதிஞ்சு போட்டு இருக்கட்டாம் ஆரோ வருவினமாம்... கூட்டம்வைக்க."

அவனுக்கும் அவளுக்கும் இடையில் கிடந்த சிறிய இடத்தில் செல்லம்மா உட்கார்ந்து கொண்டாள். சேலைத்தலைப்பால் மருமகளுக்கு விசிறி காற்றுப்படச்செய்தாள். தமிழின் தலையையும் தடவி விட்டாள்.

"கடுமையாய் வேர்க்குது பிள்ளை சரியாய் களைச்சிட்டாள்... என்னாலேயே ஏலாமக்கிடக்கு. பிஞ்சுப்பிள்ளை வாடிப்போச்சு..."

செல்லம்மா கதைத்துக் கொண்டிருக்கும்போதே வதனா ஓங்கழித்தாள்.

"பொறுபிள்ளை....."

"அங்ககிடந்து காஞ்சு தப்பி வந்தும் இந்த வெய்யிலுக்க கிடந்து வறளவேண்டிக்கிடக்கு."

"அங்கையும் பிள்ளையள காணேல்லையெண்டு காம்பு காம்பாய் அலைஞ்சு காஞ்சம், இப்பவும் பிள்ளையளுக்காக காயிறம்..."

"எங்கட தலை விதி பிள்ளையளப்பெத்து வளத்து ஆளாக்கிப்போட்டு இப்பிடி அலையிறதாப்போட்டுது."

"பிள்ளையில்லாதோர் பாக்கிய சாலிகள்' எண்டு சொன்ன மாதிரி நாங்கள் பாவம்செய்தாக்கள மாதிரி வேதனைப்படுறம்."

அந்தப்பெண்கள் பேசிய வார்த்தைகள் ராமுக்கு சமூகத்தின் மன நிலையாகவேபட்டது. தன்தாயும் இப்படித்தானே யோசிப்பாள் எங்கே உண்மைகள் தெரியப்போகின்றது.

எத்தனை பேர் உண்மை நிலை வேறாக உள்ளபோதும் உறுதிப்படுத்தமுடியாததால் தவித்தபடி அலைகிறார்கள் எனும்போது அவனுக்கு 'ஓ.....' வென்று கத்தியளவேண்டும்போல் இருந்தது.

அயினும் மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டான். அண் ணனின் உண்மை முடிவுதெரிந்த போதும் இப்படி தேவையில்லாமல் அலைந்து தாயும் வதனாவும் கஸ்ரப்படுவதை பார்க்க அவனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. விரைவில் உண்மையை போட்டுடைத்து விடவேண்டும் என்று அப்போதே முடிவெடுத்தான்.

அவன் யோசித்துக்கொண்டிருக்கும் போதே... பக்கத்திலிருந்த பெண்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டதும் ராமுக்கு தூக்கிவாரிப்போட்டது...

அவள் வருவாள்...

# ஆன்மீக உலகம்

## இந்துமதம் கூறும் விடயங்கள்



சமயவாழ்வும், சமூகவாழ்வும்

மனித உடல் வளர்ச்சிக்கு சத்துள்ள உணவு எவ்வளவு முக்கியமோ அது போலவே மனிதனது ஆன்மீக அறிவு வளமுற, வாழ்வு வளம் பெற, வாழ்க்கையின் தத்துவத்தை உணர சமயம் அவசியமாகின்றது. தெய்வ சிந்தனையுடன் நாம் செய்யும் எக்காரியமும் தர்மகாரியமாக அமைந்து அது எமக்கு நன்மையை அளிக்கும் என்ற பூரண நம்பிக்கையுடனும், மனத்திருப்தியுடனும் வாழ்ந்து எமக்கு வழிகாட்டியவர்கள் நமது மூதாதையர்.

எல்லாம் அவன் செயல், அவனன்றி ஒரு அணுவும் அசையாது, அன்பே சிவம் என்ற வாழ்க்கைத் தத்துவங்களை நமது வாழ்வு பண்படைய வழங்கியது சைவசமயம். கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்றார் பகவான் ஸ்ரீகிருஷ்ணன்.

வீணாக அலையும் மனத்தினை ஒருமைப்படுத்த சமய தத்துவங்கள் மிகவும் உறுதுணையாக உள்ளன என்பதை அனுபவமூலம் பெற்றவர்கள் பலர்.

எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்ற யோக சுவாமிகளினதும், உன்னைத் திருத்து உலகம் திருந்தும் என்ற இராமகிருஷ்ணரினதும் அருள்வாக்குகள் எமது செயல்களைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

உலகெங்கும் வளர்ந்து வரும் குழப்பமான காலகட்டத்தில் வாழும் நாம் தெய்வ சிந்தனையுடன் செயற்பட்டு, சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து, மனிதநேயத்தை வளர்த்து, எல்லோரும் இறைவன் குழந்தைகள், அன்பே கடவுள் (சிவம்) என்ற பாங்குடன் செயற்பட வேண்டும்.

தெய்வசிந்தனை நம் உள்ளத்திலே என்றென்றும் பசுமையாக நிலைநிற்கச் செய்வது தான் சமயம். சமயம் ஒருவரது வாழ்க்கையை வளமாக்கும் என்று பூரணமாக நம்பிக்கை கொண்டவர்களே சமய வாழ்வைக் கடைப்பிடிப்பார்கள்.

சமயவாழ்வு வேறு, சமூகவாழ்வு வேறு என்று வாழ்கின்ற காரணத்தினால் தான் மனிதசமூகம் பலவாறான இடர்ப்பாடுகளை அனுபவித்து துன்படைகின்றது.

மனிதர்கள் அன்றாட வாழ்வில் தத்தம் சமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கத் தவறி வந்துள்ளனர் என்பதற்கு எடுத்துக்காட்டாக உலகசம்பவங்கள் பல நீதி, நேர்மையற்ற முறையில் நடைபெற்று வருகின்றன.

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மனித உரிமை சபையில் சிறிலங்கா மீதான வாக்கெடுப்பிற்கு முன்னர் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகள் ஆற்றிய உரைகளை இவர்கள் ஒழுங்காக கேட்டிருப்பார்களென நம்புகிறேன்.

ஐ.நா.வில் கூடியிருந்த சில தமிழர் கூறியதாவது, இவர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் படுதோல்வி அடைந்தவர்கள், ஆகையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பதை எதிர்ப்பதும், அவர்கள் எதிர்ப்பதை ஆதரிப்பதுமேஇவர்களதுகொள்கையாம். இன்றுவரை இவர்கள் தமிழர்களுக்கு நாட்டில் எதை உருப்படியாக செய்தார்களென சிலர் வினவினார்கள். பத்தரிகையாளர் மாநாடு நடத்துவதும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை குறை கூறுவதும், பிழைபிடிப்பதுமே இவர்களது நாளாந்த வேலை திட்டமென வேறுசிலர் கூறினார்கள்.

நடந்து முடிந்த 25வது கூட்டத் தொடரில் ஏறக்குறைய 40லிருந்து 50 வரையிலான தமிழர்கள் கலந்து கொண்டார்கள். இவர்களில் சிலர் சிறிலங்கா அரசிற்கும் ராஜபக்ஷவிற்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வேலை செய்பவர்கள். இன்னும் சிலர், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தகவல், படங்கள் சேகரிப்பவர்களாக காணப்பட்டார்கள். தற்செயலாக அமெரிக்காவின் தீர்மானம் தோல்வியில் முடிந்திருந்தால், இக்கோமாளிகள் மக்களுக்கு என்ன ஆறுதலை, எதிர்காலத்திற்கான என்ன வழிமுறைகளை கூறியிருப்பார்கள்? இன்று வடக்கு கிழக்கு சிங்களமயமாகி வருவது இவர்கள் கண்களுக்கு தெரியவில்லையா? தமிழில் ஒரு பழமொழி கூறுவார்கள், "பேக்காட்டப்படுகிறவன் இருக்கும் வரை, பேக்காட்டுகிறவனும் இருப்பனாம்".

இறையாமை


ஒரு நாட்டினுடைய இறையாமை பற்றி ஐ. நா. தீர்மானங்களில் கூறப்பட்டுள்ளதோ இல்லையோ, இவற்றை மதித்தே பிரேரணைகள் நிறைவேற்றப் படுத் தப் படுகின் றன. சிறிலங்கா மீதான அமெரிக்காவினுடைய தீர்மானத்தின் முன்னுரை பந்தியில் சிறிலங்காவின் இறையாமை பற்றி கூறப்பட்டுள்ளது. இன்று ரஷ்யா, உக்கிரேனின் இறையாமை மதிக்காது தனது படைகளை உக்கிரேனுக்குள் நகர்த்தியுள்ளது. இவ் நகர்வை சிறிலங்கா ஆதரிக்கிறது. இவ்வேளையில் சிறிலங்கா எப்படியாக தனது இறையாமை பற்றி பேச முடியும்?

மனிதஉரிமைசபையில்இவ்தீர்மானத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை கண்டு பல நாடுகள், சர்வதேச அமைப்புக்கள், சர்வதேச வல்லுனர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்கள். இவ் விடயத்தில் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா, வெனிசூலா ஆகிய நாடுகளுடன் இணைந்து இவ் தீர்மானத்தை விவாதிக்கப்பட்டதெனவும், 10வது பந்தியை நீக்க வேண்டுமென இந்தியா வாக்களித்ததன் ரகசியம் என்ன?

இவ் தீர்மானத்திற்கு இந்தியா நடுநிலைவகித்துள்ளதற்கு மேலாக, வாக்களிப்பதற்கு முன்னர் இந்தியா தூதுவரின் உரையில் பல உண்மைகள் மூடிமறைக்கப்பட்டுள்ளது. இவ் தீர்மானத்தை வெற்றியின் அடிப்படையில் ஆராயும் பொழுது, சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் ஆதரவு இல்லாது, அவ் பிராந்தியத்தில் அமெரிக்கா தன்னால் தனித்து நின்று வெற்றியடைய முடியுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதா?

ச. வி. கிருபாகரன்

## அண்ணல் நபிகளாரின் பொன்மொழிகள்



1.செயல்கள் அனைத்தும்எண்ணங்களை பொறுத்தே அமைகின்றன.

2. இறைவன் உங்கள் உருவங்களையோ, உங்கள் செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களையும், செயல்களையும் பார்க்கின்றான்.

3.அமானிதத்தை (அடைக்கலப் பொருளை) பேணிக் காக்காதவனிடம் ஈமான் இல்லை (நம்பிக்கை இல்லை) வாக்குறுதியை நிறைவேற்றாதவரிடம் தீன் (இறைநெறி) இல்லை.

4. உங்கள் வீடுகளில் இறைவனுக்கு மிக விருப்பமானது அனாதைகளை அரவணைக்கும் வீடேயாகும்.

5. நிதானம் என்பது இறைவனின் தன்மையாகும். அவசரம் ஷைத்தானின் தன்மையாகும்.

6. உங்களில் நற்குணம் உடையவரே உங்களில் சிறந்தவர் ஆவார்.

7. எளிமையாக வாழ்வது இறை நம்பிக்கையின் பாற்பட்டதாகும்.

09. கூலியாளின் வியர்வை உலருவதற்கு முன் அவருடைய கூலியை கொடுத்துவிடுங்கள்.

10. பதுக்கல் செய்பவன் பாவியாவான்.

11. தாயின் காலடியில் சுவர்க்கம் இருக்கிறது.

12. பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்

13. தந்தை தன் மக்களுக்கு அளிக்கும் அன்பளிப்புகளில் மிகச் சிறந்தது அவர்களுக்கு அளித்திடும் நல்ல கல்வியும், நல்லாக்கப் புயிற்சியும் ஆகும்.

14. அனைத்தையும் விடச் சிறந்த சேமிப்பு பொருள்கள் இறைவனை நினைவு கூரும் நாவு, இறைவனுக்கு நன்றி செலுத்தும் உணர்வால் நிரம்பிய உள்ளம், இறைவழியில் நடந்திட தன் கணவனுக்கு உதவிடும் இறை நம்பிக்கையுள்ள நல்ல மனைவி ஆகியனவே.

15. நான் உங்களுக்கு மிகச்சிறந்த தர்மம் ஒன்றை கூறட்டுமா? அது, தனக்கு பொருளீட்டி உணவளிக்க வேறு யாருமில்லை என்ற நிலையில் உன் பக்கம் திருப்பி அனுப்பப்பட்ட உன் மகள் தான்.

17. அநாதையின் தலையை இரக்கத்துடன் தடவுங்கள்.

## ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்



ஆவியில் எளிமை கொண்ட மனிதர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

இம்மையில் துக்கம் அடைந்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். தேவன் அவர்களைத் தேற்றுவார்.

பணிவுடையவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். தேவன் வாக்களித்த இடத்தை அவர்கள் பெறுவார்கள்.

மற்ற எதைக் காட்டிலும் நீதியான செயல்களைச் செய்ய விரும்புபவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு முழுத் திருப்தியை தேவன் அளிப்பார்.

மற்றவர்களுக்குக் கருணை காட்டுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்குக் கருணை காட்டப்படும்.

தூய்மையான எண்ணமுடையவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்கள் தேவனின் அருகாமையிலிருப்பார்கள்.

அமைதிக்காகச் செயலாற்றுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். தேவன் அவர்களைத் தன் குமாரர்கள் என அழைப்பார்.

நன்மை செய்வதற்காகத் தண்டிக்கப்படுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். பரலோக ராஜ்யம் அவர்களுக்குரியது.

உங்களுக்கெதிராகத் தீய சொற்களைப் பேசி மக்கள் உங்களைத் துன்புறுத்துவார்கள். நீங்கள் என்னைப் பின்பற்றுவதனிமித்தம் எல்லாவிதமான தீய சொற்களையும் உங்களுக்கெதிராகச் சொல்வார்கள். ஆனால் மக்கள் உங்களுக்கு அவற்றைச் செய்யும் பொழுது நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அதற்காக மகிழ்ச்சியடையுங்கள். தேவனுடைய வெகுமதி உங்களுக்கு காத்திருக்கிறது.

தட்டுங்கள் திறக்கப்படும்

தொடர்ந்து கேட்டுக் கொண்டிருங்கள். தேவன் உங்களுக்குக் கொடுப்பார். தேடிக் கொண்டே இருங்கள். நீங்கள் தேடியதைக் கண்டறிவீர்கள். தொடர்ந்து தட்டிக் கொண்டே இருங்கள். கதவு உங்களுக்காகத் திறக்கப்படும். ஆம், ஒரு மனிதன் தொடர்ந்து கேட்டால் அவன் பெற்றுக் கொள்வான். ஒரு மனிதன் தொடர்ந்து தேடினால் அவன் தேடியதை அடைவான். ஒரு மனிதன் தொடர்ந்து தட்டினால் கதவு அவனுக்காகத் திறக்கப்படும்.

அனைவரையும் நேசியுங்கள்

உங்களை நேசிக்கிறவர்களை மட்டும் நீங்கள் நேசித்தால், உங்களுக்கு எந்த வெகுமதியும் கிடைக்காது. உங்கள் நண்பர்களுடன் மட்டுமே நீங்கள் இனிமையுடன் பழகினால், மற்றவர்களை விட நீங்கள் எவ்வகையிலும் சிறந்தவர்கள் அல்ல. பரலோகத்திலிருக்கும் உங்கள் பிதா மிகச் சிறந்த நற்குணங்கள் கொண்ட பூரணராயிருப்பது போல நீங்களும் பூரணராக இருக்க வேண்டும்.

மெய்வாழ்வுக்கான வாசல்

பரலோகத்திற்குச் செல்லும் குறுகிய வாசலுக்குள் நுழையுங்கள். நரகத்திற்குச் செல்லும் பாதையோ எளிமையானது. ஏனெனில், நரகத்தின் வாசல் அகன்றது. பலர் அதில் நுழைகிறார்கள்.

ஆனால், மெய்யான வாழ்விற்கு வாசல் மிகவும்குறுகியது. மெய்யான வாழ்விற்குக் கொண்டு செல்லும் பாதையோ கடினமானது. மிகச் சிலரே அப்பாதையைக் கண்டறிகிறார்கள்.

# அறிவியல் உலகம்


## மைக்ரோசாப்ட் மொபைலாக மாறுகிறது "நோக்கியா"




உலகின் முன்னணி மொபைல் நிறுவனமான நோக்கியா, இனி மைக்ரோசொப்ட் மொபைல் என பெயர் மாற்றம் செய்யப்பட உள்ளது. உல கின் முன்னணி மொபைல் நிறுவனமான நோக்கியா, மைக்ரோசொப்ட் நிறுவனத்துடன் 7.3 பில்லியன் டொலருக்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன்படி இம்மாத இறுதிக்கு பின் நோக்கியா இனி மைக்ரோசொப்ட் மொபைல் என பெயர் மாற்றம் செய்யப்பட்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுகுறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

கடந்த 2013ம் ஆண்டின் 7.2 பில்லியன் டொலருக்கு இரு நிறுவனங்களும் செய்து கொண்ட ஒப்பந்தம் இம்மாத இறுதியில் முடிவடைவதை அடுத்து இந்த பெயர் மாற்றம் ஏற்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## Motorola நிறுவனத்தின் Moto G LTE விரைவில் அறிமுகம்




பிரபல கைப்பேசி உற்பத்தி நிறுவனமான Motorola தனது புதிய கைப்பேசியான Moto G LTE இனை எதிர்வரும் ஜூலை மாதம் அறிமுகம் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது. 1.2GHz Quad Core Snapdragon 400 Processor, மற்றும் 1GB RAM ஆகியவற்றினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது 4.5 அங்குல அளவு மற்றும் 1280 x 720 Pixel Res olution உடைய தொடுதிரையினை கொண்டுள்ளது.

இதில் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கென 1.3 மெகாபிக்சலை உடைய கமெரா ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் இக்கைப்பேசியானது கூகுளின் Android 4.4 Kit Kat இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## LG நிறுவனத்தின் புதிய தயாரிப்பு - Isai FL



LG நிறுவனம் தனது புதிய தயாரிப்பான Isai FL எனும் அதி உயர் வசதிகளைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது. 5.5 அங்குல அளவுடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது 2.5GHz வேகத்தில் செயற்படக்கூடிய Snapdragon 801 Processor, 2GB RAM மற்றும் சேமிப்பு நினைவகமாக 32GB கொள்ளளவு ஆகியவற்றினைக் கொண்டுள்ளது.

மேலும் Android 4.4 KitKat இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ள இக்கைப்பேசியில் 3,000 mAh உடைய நீடித்து உழைக்கக்கூடிய மின்கலமும் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆரோக்கியம் வேண்டுமானால் இந்த பழங்களைச் சாப்பிடுங்கள்



ஆரோக்கியமான வாழ்வை விரும்புவது மட்டுமல்லாமல் ஆரோக்கியமான உணவுகளையும் உண்ண வேண்டும். நல்ல ஆரோக்கியமான உணவு களை சாப்பிடுவது, உடற்பயிற்சிகளை செய்வது என்று சில ஆரோக்கியமான விடயங்களை கடைபிடிக்க வேண்டும்.

குறிப்பாக கோடையில் உடலை குளிர்ச்சியுடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்துக்கொள்ள காய்கறிகள் மற்றும் பழங்களை அதிகம் வாங்கி வந்து சாப்பிடுவர்கள்.

ஏனென்றால் கோடையில் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க நீர்ச்சத்தானது அதிக அளவில் தேவைப்படும். மேலும் புரோட்டீன், விட்டமின் போன்றவைகளும் அதிகம் தேவைப்படுவதால், அத்தகைய சத்துக்கள் நிறைந்த உணவுப்பொருட்களை அன்றாடம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

காய்கறிகளை சாப்பிட முடியாவிட்டாலும், கோடையில் அத்தகைய சத்துக்கள் நிறைந்த பழங்களையாவது சாப்பிட வேண்டும்.

இதோ ஆரோக்கியத்துடன், குளிர்ச்சி தரும் பழங்கள் உங்களுக்காக,

### வாழைப்பழம்

வாழைப்பழம் எப்போதுமே எனர்ஜியை அதிகம் உள்ளடக்கிய பழங்களில் ஒன்று. எனவே இத்தகைய வாழைப்பழத்தை தினமும் இரண்டு சாப்பிட்டு வருவது மிகவும் நல்லது.

### தர்பூசணி

தர்பூசணியில் லைகோபைன் என்னும் அன்டி-அக்ஸிடன்ட் அதிக அளவில் உள்ளது. இவை இதய நோய் வராமல் தடுக்கும் சக்தி கொண்டவை. எனவே இதனையும் கோடையில் தினமும் சாப்பிட்டு வருவது நல்லது.

### தோடம்பழம்

நீரிழிவு நோய் இருந்தால், தோடம் பழத்தை தினமும் சாப்பிடுவது நல்லது. ஏனெனில் இவை சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தி, போதிய இன்சுலினை சுரக்கச் செய்யும்.

### ஸ்ட்ரோபெரி

ஸ்ட்ரோபெரியை ஜூஸாகவோ அல்லது அப்படியே சாப்பிட்டால், அதில் உள்ள வைட்டமின்கள் வயிற்றில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளைத் தடுக்கும்.

### கொய்யாப்பழம்

இவை உடலில் உள்ள யூரிக் ஆசிட்டின் அளவை சிறுநீரின் வழியே வெளியேற்றி, உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவியாக இருக்கும்.


### திராட்சை

தைராய்ட் உள்ளவர்கள், தினமும் திராட்சையை சாப்பிடுவது நல்லது. ஏனெனில் இவை தைராய்ட் சுரப்பியின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும்.

### செர்ரி

செர்ரியை தினமும் சாப்பிட்டு வந்தால், அவை ஒர்த்ரிடிஸ் பிரச்சனை வராமல் தடுக்கும்.

## விரைவில் வெளி வரும் பேஸ்புக் மொபைல் விளம்பரங்கள்



பில்லியன் வரையான பயனர்களை தன்னகத்தே கொண்ட பிரபல சமூக இணையத்தளமான பேஸ்புக், விரைவில் மொபைல் சாதனங்கள் மூலமான விளம்பர சேவையை ஆரம்பிக்கவுள்ளது. இது தொடர்பான அறிவித்தலை இம்மாதம் 30ம் திகதி இடம்பெறவுள்ள F8 மாநாட்டில் வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை டுவிட்டர் வலைத்தளமும் இச்சேவையினை ஆரம்பித்துள்ளதுடன், இதற்காக MoPub எனும் உலகின் மிக வும் பிரம்மாண்டமான மொபைல் விளம்பர நிறுவனத்தினை கடந்த வருடம் கொள்வனவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆரோக்கியத்தைப் பேண இலத்திரனியல் சாதனம் அறிமுகம்



நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உடல் ஆரோக்கியத்தினை பேணுவதற்கு பல்வேறு இலத்திரனியல் சாதனங்கள் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளன. இவற்றின் வரிசையில் தற்போது Withings Pulse O2 எனும் புதிய சாதனம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இது குருதியில் காணப்படும் ஒக்ஜிஜன் மட்டத்தினை துல்லியமாக எடுத்துக்காட்டவல்லது. இவை தவிர தூக்கத்தின் அளவு, இதயத்துடிப்பு என்பவற்றினையும் அறிந்து சொல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் விலை யானது 120 டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## LG அறிமுகம் செய்யும் ஸ்மார்ட் கடிகாரம்




ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் அப்பிள், சம்சுங் போன்ற நிறுவனங்களுடன் LG நிறுவனமும் களம் இறங்கியுள்ளது.

G Watch எனப்படும் இப்புதிய ஸ்மார்ட் கடிகாரத்தினை எதிர்வரும் கோடைகாலத்தில் அறிமுகம் செய்ய அந்நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இருவகையான நிறங்களில் உருவாக்கப்பட்டுள்ள இக்கடிகாரங்கள் கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டவையாக காணப்படுகின்றன.

இதேவேளை மாசுக்கள், நீர் என்பவற்றிடமிருந்து பாதுகாப்பினைக் கொண்டதாக இக்கடிகாரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தசைவலி, மூட்டு வலியை குறைக்கும் "விட்டமின் டி"




தசைவலி மற்றும் மூட்டு வலியை விட்டமின் டி குறைக்கும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர். ஐரோப்பிய நாடான ஆஸ்திரியா தலை நகர் வியன்னாவில் உள்ள, எலும்பு முறிவு மருத்துவமனையின் தலைவர் ப்ளோரியான் வெய்னர் இதுகுறித்து கூறியதாவது, விட்டமின் டி குறைவால், பைப்ரோமாயல்ஜியா என்னும் நோய் தாக்குகிறது.

இந்த நோய் பாதித்தவர்களின் உடல் தசைகள் மற்றும் மூட்டுகளில், ஏற்படும் வலி குறைவதில்லை. இந்த வலியால் பாதிக்கப்பட்டோர், தூக்கமின்மை, களைப்பு, மன அழுத்தம் மற்றும் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய நோயாளிகளுக்கு விட்டமின் டி யை போதிய அளவில் அளித்தால் குணமடைய வாய்ப்பு உண்டு.

நோய் முற்றிலும் குணமாகா விட்டாலும் தசை வலி மற்றும் மூட்டு வலி பெருமளவு குறையும். இந்த ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட, 30 பேருக்கு, விட்டமின் டி மருந்துகள் அளிக்கப்பட்டன.

இருபது வாரங்கள், விட்டமின் டி மருந்துகளை உட்கொண்டவர்களின், நீண்டநாள் வலிகள் பெருமளவு குறைந்தது கண்டறியப்பட்டது என்றும் அவர்களிடம் மன அழுத்தம் சிறி தும் காணப்படவில்லை எனவும் கூறியுள்ளார்.

# விளையாட்டு உலகம்


## உலகக்கிண்ண கால்பந்து டிக்கெட் விற்பனை

பிரேசிலில் வருகிற ஜுன் மாதம் தொடங்கவுள்ள உலக கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை சூடுபிடித்துள்ளது.

உலக கிண்ண கால்பந்தாட்ட போட்டிகள் பிரேசிலில் வருகிற ஜுன் மாதம் 12ம் திகதி தொடங்குகிறது. போட்டி நடைபெறவுள்ள 12 நகரங்களில் 10 நகரங்களில் டிக்கெட் விற்பனை தொடங்கியது.

ரியோ டி ஜெனிரோவில் உள்ள மைதானத்தில், டிக்கெட்டுகளை வாங்க கால்பந்து ரசிகர்கள் கூட்டம் கூட்டமாக குவிந்தனர். முதல் போட்டி நடைபெற உள்ள சா பாவ்லோ நகரிலும், ரசிகர்கள் ஆர்வமுடன் டிக்கெட்டுகளை வாங்கிச் செல்கின்றனர்.

## விபத்தில் சிக்கிய கீமர் ரோச்



மேற்கிந்திய தீவுகள் அணி கிரிக்கெட் வீரர் கீமர் ரோச், கார் விபத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக காயமின்றி உயிர் தப்பியுள்ளார். இவர் இதுவரை 23 டெஸ்ட், 61 ஒருநாள் மற்றும் 11 டி20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

கீமர், பார்படோசில் உள்ள கிரிக்கெட் மைதானத்திற்கு அருகே காரை ஓட்டி சென்று கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த கார், பல தடவை உருண்டு விபத்துக்குள்ளானது. அவர் உடனடியாக அம்புலன்ஸ் மூலம், மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அதிர்ஷ்டவசமாக பெரிய அளவில் இவருக்கு காயம் ஏற்படவில்லை. இது குறித்து ரோச் தனது டுவிட்டர் இணையதளத்தில், கார் விபத்தால் தனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றும், தற்போது நலமுடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## காயம் காரணமாக பிராவோ விலகல்



சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வீரரான பிராவோ காயம் காரணமாக வரும் ஐ.பி.எல் போட்டிகளில் ஆட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தில் அதிரடி வீரர் கிளைன் மேக்ஸ்வெல் பந்தை விரட்டியடித்த போது, எல்லைக்கோடு அருகே பாய்ந்து சென்று பிராவோ தடுக்க முயற்சித்தார்.

அப்போது அவரது தோற்பட்டையில் காயம் ஏற்பட்டது. வலியால் துடித்த அவர் உடனடியாக வெளியேற்றப்பட்டார். இதன் காரணமாக அவர் ஐ.பி.எல் எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். இது குறித்து அணித்தலைவர் டோனி கூறுகையில், பிராவோவின் காயம் குணமடைய இன்னும் 4 முதல் 5 வாரங்கள் ஆகலாம். அதனால் அவரால் இந்த தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர் வீரர்களின் அறையில் இல்லாமல் போவது வருத்தம் அளிக்கிறது.

பந்து வீச்சு, களத்தடுப்பு, துடுப்பாட்டம் என மூன்று துறைகளிலும் முத்திரை பதிக்கக்கூடியவர் பிராவோ. அவரது காயம் சென்னை அணிக்கு மிகப்பெரிய பின்னடைவு என்பதில் சந்தேகமில்லை என்று கூறியுள்ளார். இதை தொடர்ந்து அவருக்கு பதிலாக சென்னை அணி மாற்று வீரரை தெரிவு செய்து கொள்ளலாம் என்று சென்னை அணிக்கு ஐ.பி.எல். அமைப்பு அனுமதி அளித்துள்ளது. சென்னை அணி விரைவில் மாற்று வீரரை தெரிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மகளிர் கிரிக்கெட்டுக்கும் ஐ.பி.எல் வேண்டும்



மகளிருக்கும் ஐ.பி.எல் போன்ற கிரிக்கெட் போட்டியை நடத்த வேண்டுமென இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவி அஞ்சும் சோப்ரா வலியுறுத்தியுள்ளார். இந்தியாவில் மகளிருக்கான கிரிக்கெட்டை மேம்படுத்த அவர்களுக்கென்று தனியாக ஐ.பி.எல் போட்டிகளை நடத்த வேண்டும் என்று தெரிவித்த அஞ்சும் சோப்ரா செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறுகையில், மகளிருக்கான ஐ.பி.எல் போட்டிகள் நடத்துவதன் மூலம் ஏராளமான இளம் வீராங்கனைகள் ஆர்வத்துடன் கிரிக்கெட் விளையாட வருவார்கள்.

இதன் மூலம் திறமையான வீராங்கனைகளை உருவாக்க முடியும். இந்தியாவில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் மகளிர் கிரிக்கெட் இப்போது மிகவும் பிரபலமாகிவிட்டது. இந்தக் காரணங்களால் மகளிருக்கான ஐ.பி.எல் அறிமுகப்படுத்தப்பட்டால் நிச்சயமாக பிரபலமடையும். அதற்கும் நல்ல வரவேற்பு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை என்று கூறியுள்ளார்.

மேலும் ஆடவர் கிரிக்கெட் அணியின் வீரர்களை முன் மாதிரியாகக் கொண்டு மகளிர் கிரிக்கெட் விளையாடுவதில் எந்த பிரச்சினையும் இல்லை என்று கூறிய அஞ்சும் சோப்ரா, தான் சச்சினின் ரசிகை என்றும், கிரிக்கெட்டில் சச்சினுக்கு அடுத்த இடங்களில் இருப்பவர்களுடன் ஒப்பிடுகையில் அவர் மிகப்பெரிய சாதனையாளர் எனவும் கூறியுள்ளார்.

## டோனியை புகழ்ந்த பிரன்டன் மெக்கலம்



உலகின் மிகச் சிறந்த அணித்தலைவர் டோனி தான் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி வரும் பிரன்டன் மெக்கலம் புகழாரம் சூட்டியுள்ளார். ஐ.பி.எல் தொடரின் போட்டியில் சென்னை டெல்லி அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது.

முதலில் களமிறங்கிய சென்னை அணி 177 ஓட்டங்கள் எடுத்தது, சென்னை அணியில் வெய்ன் சுமித், சுரேஷ்ரெய்னா ஆகியோரின் ஆட்டத்தால் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது. 178 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய டெல்லி அணியின் துடுப்பாட்டக்காரர்கள் சொதப்ப அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 15.4 ஓவர்களில் 84 ஓட்டங்களில் சுருண்டது. இதன் மூலம் சென்னை அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.

இதுகுறித்து நியூசிலாந்தை சேர்ந்த பிரன்டன் மெக்கலம் கூறுகையில், அனைவரையும் மிகவும் பணிவாக வழிநடத்தும் டோனி, உலகின் சிறந்த அணித்தலைவர். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் ஆடுகளம் சம்பந்தமாக தன்னிச்சையாக முடிவு எடுக்கும் திறன் படைத்தவர். அவரது தலைமையின் கீழ் விளையாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது, அவரிடம் இருந்து அதிக விஷயங்களை கற்று வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## தொடரும் ஐ.பி.எல் சூதாட்டம் – 9 பேர் கைது

கடந்த ஐ.பி.எல் போட்டிகளில் நடந்த சூதாட்ட பிரச்சினை தொடரும் வேளையில், இந்த ஐ.பி.எல் தொடரிலும் பலர் சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐ.பி.எல். போட்டிகள் மெல்ல மெல்ல சூடு பிடித்து வரும் நிலையில் மறுபக்கம் கிரிக்கெட் சூதாட்டங்களும் களைகட்டத் தொடங்கியிருக்கிறது.


ஐ.பி.எல். பெட்டிங்கில் ஈடுபட்டதாக இதுவரை மொத்தம் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பெட்டிங்கில் ஈடுபட்டதாக ஆகாஷ் மாத்தூர், கரன் சர்மா, முகேஷ் மீனா, வேத்பிரகாஷ், லால்சந்த், பைசல் ஆகிய ஆறு புக்கிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில், அவர்கள் உள்ளூர்வாசிகள் என்பதும், கொல்கத்தா மற்றும் டெல்லி அணிகளுக்கு இடையேயான போட்டியின் போது சூதாட்டத்தில் ஈடுபட்டதும் தெரியவந்துள்ளது.

அவர்களிடமிருந்து 7 ஆயிரத்து 800 ரூபாய் ரொக்கப்பணமும், பல லட்ச ரூபாய் பணபரிவர்த்தனைக்கான வங்கி ரசீதுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் அவர்கள் வைத்திருந்த லேப்டாப், செல்போன்கள், எல்.ஈ.டி டி.வி ஆகியவற்றையும் காவல்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

## பயிற்சியாளர் பதவி விலகல்



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் போல் பார்பிரேஸ் பதவியிலிருந்து விலகியுள்ளார். இங்கிலாந்தின் போல் பார்பரேஸ், இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக பதவி வகித்து வந்தார்.

இந்நிலையில் இன்று தனது பதவியை இராஜினாமா செய்வதாக இலங்கை கிரிக்கெட் வாரியத்திடம் தெரிவித்துள்ளார், இதனை வாரியம் உறுதி செய்துள்ளது. சமீபத்தில் நடந்து முடிந்த உலக கிண்ண டுவென்டி-20 கிரிக்கெட் போட்டியில், இவரின் பயிற்சியின் கீழே இலங்கை அணி கிண்ணத்தை வென்றது.

இந்நிலையில் பார்பரேஸின் முடிவு குறித்து இலங்கை கிரிக்கெட் கவலை கொள்வதாக, இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் செயலாளர் நிசாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கட் வாரியம் பார்பரேசுக்கு தருவதாக இணங்கியுள்ள சம்பளத் தொகையை இலங்கையால் தர முடியாமையே அவரின் பதவி விலகலுக்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பார்பரேஸ் இங்கிலாந்து கிரிக்கட் அணிக்கு துணை பயிற்சியாளராக நியமிக்கப்பட உள்ளார்.


**நிரந்தர வேலைவாய்ப்புக்கள்**

18-50 வயது ஆண் பெண் இருபாலருக்கும் பல வெற்றிடம் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் பிரதான தொழிற்சாலைகளான ஜேம்,கோபியல்,பிஸ்கட்,சொக்லெட், PVC மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல் பொதியில் பிரிவுக்கு மற்றும் துறைமுகம்(தனியார்) சாதாரண ஊழியர்கள்,வெல்டர், தனியார் பாதுகாப்பு உத்தியோக JSO,LSO,SSO,OIC, களஞ்சிய,பெண்,சாரதிகள்,சாரதி உதவியாளர்கள், ஹோட்டல்,ஹோட்டல்,Resturent,Roomboy,Stoorad,chef,Kitchen helper உணவு, தங்குமிடம் குறைந்த விலையில் சம்பளம் 18000, 25000, 35000 வரை வருகை தரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

தொடர்பு :- 0775561883,0776838231

# உலகச் செய்திகள்

## கப்பல் விபத்து திட்டமிட்ட கொலைக்கு சமனாகும்



தென்கொரிய கப்பல் விபத்து திட்டமிட்ட கொலைக்கு ஒப்பாகும் என தென்கொரிய ஜனாதிபதி பார்க் குன் ஹையி தெரிவித்துள்ளார். தென் கொரிய தலைநகர் சியோலுக்கு அருகே உள்ள இன்செயான் துறைமுகத்தில் இருந்து, ஜெஜு தீவுக்கு கடந்த 16ம் திகதி சென்ற கப்பல் நடுக்கடலில் மூழ்கியது.

இந்த விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 58ஆக உயர்ந்துள்ளது. மேலும், மாயமான பலரைத் தேடும் பணி வானிலை காரணமாக தொய்வாக நடந்து வருகிறது. இதுகுறித்து தென் கொரிய ஜனாதிபதி பார்க் குன் ஹையி கூறுகையில், தென்கொரிய கப்பலின் கெப்டன் மற்றும் சில குழு உறுப்பினர்கள் ஈடுபட்ட நடவடிக்கைகள் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளது.

இது ஒரு கொலைக்கு ஒப்பாகும், எனது மனதை மட்டும் அல்லாமல் தென் கொரிய மக்கள் அனைவரின் மனதை இந்த விபத்து துளைத்துவிட்டது. இங்கு இருக்கும் பயணிகள் அனைவரின் மன நிலையும் ஒன்றாகவே இருக்கிறது, அதில் கோபமும் அதிர்ச்சியும் தான் இருக்கிறது.

இந்த விபத்துக்கு முழு பொறுப்பு கப்பலின் நிர்வாகம் மட்டும் தான் என்பது தெளிவாக இருக்கிறது. பாதுகாப்பின்மை குறைப்பாடுகளே . இந்த பேரழிவுக்கு காரணம். இதற்கு சட்டபூர்வமான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே கப்பல் கடலில் மூழ்கிய போது அதிக அனுபவமில்லாத இளம்பெண் ஓட்டியது தெரியவந்துள்ளது. மேலும் இதற்கு முன்னதாக அவர் கப்பல் எதையும் ஓட்டவில்லை, அப்போது தான் முதல் முறையாக கப்பலை ஓட்டியுள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

## சிரியா இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துகிறது



சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துகின்றார் என பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே தெரிவித்துள்ளார். சிரியாவில் கடந்த 2011ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கிய போராட்டம் இன்னும் முடியாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி, சிரிய அரசு மக்களை கொன்றுகுவிக்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

இதனை தொடர்ந்து இரசாயன ஆயுதங்களை முற்றிலுமாக அழித்துவிட சிரிய அரசு முடிவு செய்தது. இந்நிலையில் தொடர்ந்து இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி வருவதாகவும், ஆயினும் தகுந்த ஆதாரங்கள் இல்லை என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் வெளிவிவகாரத்துறை அமைச்சர் கூறுகையில், இரசாயன ஆயுத தாக்குதல்கள் பொதுமக்கள் மீது நடத்தப்பட்டது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், லெபனானின் எல்லைப் பகுதியில் சிரியாவின் வடமேற்கு பகுதியில் உபயோகப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இதை திட்டவட்டமாக நிருபிப்பதற்கு தகுந்த ஆதாரங்கள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த ஏப்ரல் மாத முதல் வாரத்தில் குளோரின் கேஸ் என்ற விஷவாயு உபயோகப்படுத்தப்பட்டு, 100 பேர்களுக்கு மேல் சுவாசிக்க இயலாமல் மூச்சுத்திணறி இறந்துள்ளனர்.

ஆனால் இதற்கு அல்கொய்தா தீவிரவாதிகள் தான் காரணம் என சிரிய அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

## விமானப் பயணிகளுக்கு மரண சான்றிதழ் அளித்த அரசு




மலேசிய விமானத்தில் பயணம் செய்த 239 பேருக்கும் மலேசிய அரசு மரண சான்றிதழ் வழங்கியுள்ளது. மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் இருந்து, சீனாவின் தலைநகரான பீஜிங்கிற்கு 239 பேருடன் புறப்பட்டு சென்ற விமானம் கடந்த 8ம் திகதி அதிகாலை நடுவானில் மாயமானது.

மலேசிய விமானம் MH370 மாயமாய் மறைந்து போய் 46 நாட்கள் ஆகின்றது. இதுவரை எட்டு நாடுகளின் மீட்பு படைகள் இரவு பகலாக கடலின் அனைத்து பகுதிகளிலும் தேடியும் எவ்வித தகவலும் கிடைக்காததால், விமானத்தை தேடும் பணியை நிறுத்தப்போவதாக மீட்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

மலேசிய அரசு ஏற்கனவே அந்த விமானத்தில் பயணம் செய்த 239 பயணிகளும் மரணம் அடைந்ததாக அறிவித்திருந்தது.

இந்நிலையில் பயணிகளின் உறவினர்களுக்கு நேற்று மலேசிய அரசு விமானப்பயணிகளின் மரண சான்றிதழ்களை வழங்கியது. இதன்மூலம் பயணிகள் அனைவரும் இறந்ததாக சட்டபூர்வமாக உறுதி செய்யபப்ட்டுள்ளது. மேலும் பயணிகளின் உறவினர்கள் விமான நிர்வாகத்தின் மீது வழக்கு தொடரவும், மலேசிய அரசு அனுமதி கொடுத்துள்ளது.

## 88வது பிறந்தநாளைக் கொண்டாடி மகிழ்ந்த ராணி எலிசபெத்



இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் தனது 88வது பிறந்தநாளை கொண்டாடியிருக்கின்றார். எலிசபெத் அலெக்சாண்டிரா மேரி என்ற பெயர் கொண்ட இரண்டாம் எலிசபெத் 1926-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் திகதி பிறந்தார்.

இவர் ஐக்கிய நாடுகள் உட்பட 16 இறைமையுள்ள நாடுகளின் அரசியல் சட்டப்படியான அரசியாக உள்ளார்.

அனைத்து நாடுகளுக்கும் இவர் தனித்தனியே வெவ்வெறு பெயர்களின் ஆட்சிப் பெயர்களை கொண்டிருந்தாலும், ஐக்கிய நாடுகளிலேயே லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் இவர் வாழ்கிறார். 54 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட பொதுநலவாயத்தின் தலைவரும் இவரே, இங்கிலாந்து திருச்சபையின் மிக உயரிய ஆளுநரும் ஆவார்.

62 ஆண்டுகளாக அரசாட்சி புரியும் இவர் பிரித்தானிய அரசர்களிலேயே இரண்டாவது மிக நெடுங்காலம் ஆட்சி புரிந்தவராக விளங்குகிறார். விக்டோரியா மகாராணியார் மட்டுமே இவரை விட நீண்டகாலமாக 63 ஆண்டுகள் ஆட்சிபுரிந்துள்ளார்.

## தென்கொரியாவை மிரட்டும் வடகொரியா



வடகொரியா நான்காவது முறையாக அணுகுண்டு சோதனைக்கு தயாராகி வருகிறது என தென்கொரியா பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளது. உலக நாடுகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2006, 2009 மற்றும் 2013ம் ஆண்டுகளில் அணுகுண்டு சோதனை நடத்தியதுடன் தென்கொரியாவுக்கு அச்சுறுத்தல் விடுத்து வருகிறது. இந்நிலையில் வடகொரியா மீண்டும் அணுகுண்டு சோதனைக்கு தயாராகி வருவதாக தென் கொரியா திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டின் இராணுவ செய்தி தொடர்பாளர் கிம் மின் சேயோக் கூறுகையில், வடகொரியா ஏற்கனவே பங்க்யேரி என்ற இடத்தில் இருந்துதான் அணு குண்டு சோதனைகளை நடத்தியது.

இப்போதும் அந்த இடத்தில் அணுகுண்டு சோதனை நடத்துவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருவதை தென்கொரிய வீரர்கள் கண்டுபிடித்துள்ளனர். தற்போதைய நடவடிக்கைகளைப் பார்த்தால், வடகொரிய ஆட்சித்தலைமை உத்தரவிட்டவுடன் எந்த நேரத்திலும் அணுகுண்டு சோதனை நடைபெறலாம்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, வருகிற 25ம் திகதி தனது ஆசியப் பயணத்தை தொடங்குகிறார், அவர் சியோலுக்கும் வருகிறார். இந்நிலையில் பதற்றத்தை ஏற்படுத்துகிற வகையில் இது ஏமாற்று உத்தியாகவும் இருக்கக்கூடும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே வடகொரியா நான்காவது முறையாக அணுகுண்டு சோதனை நடத்தினால் அது மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுக்கக்கூடும் என தென்கொரிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் யுன் பையங் சே எச்சரித்துள்ளார்.

## கனேடிய முன்னாள் பிரதமர் மரணம்



கனடிய முன்னாள் துணைப் பிர தமராகப் பணியாற்றிய Herb Gray உடல்நலக்குறைவால் மரணமடைந்துள்ளார். 1962ம் ஆண்டு, தனது 31வது வயதில் பாராளுமன்றத்தில் அடியெடுத்து வைத்த இவர் 12 தடவை தோல்வியை தழுவாமல் அமைச்சர் பதவியை வகித்துள்ளார்.

குறிப்பாக தேசிய வருவாய், நுகர்வோர் சம்பந்தமான துறைகளில் மந்திரி பதவிகளை வகித்துள்ளார்.

1997ம் ஆண்டில் துணைப்பிரதமராகப் பதவியேற்ற இவர் அண்மைக்காலமாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். குறிப்பாக இருதயக் கோளாறு மட்டுமல்ல புற்று நோயாலும் பாதிக்கப்பட்டிருந்த இவர் தற்போது மரணமடைந்துள்ளார்.







பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 6906182

# விந்தை உலகம்

## தங்கத்தால் ஜொலிக்கும் சறுக்குப் பலகை......




நியூயோர்க் நகரிலுள்ள கடை ஒன்றிற்காக மத்தியூ விலட் எனும் கலைஞர் ஒருவர் தங்க முலாம் பூசப்பட்ட சறுக்கு பலகையொன்றை வடிவமைத்துள்ளார். 15000 டொலர்கள் செலவில் வடிவமைக்கப்பட்ட இப்பலகையானது மற்ற பலகையை விட 80 சதவீதம் அதிக பாரமானதாக காணப்படுகிறது.

தங்க முலாமிடப்பட்டுள்ள போதிலும் இந்த சறுக்குப் பலகையின் அனைத்து பாகங்களும் முற்றிலும் இயங்கக்கூடியதாக உள்ளது என மத்தியூ விலட் கூறுகிறார். "நான் எனது வாழ்க்கை முழுவதும் ஸ்கேட்போர்ட்டை பயன்படுத்தியுள்ளேன். அதனால் இவ்வாறானதொரு பொருளை தயாரிப்பது சிரமமாக இருக்கவில்லை. எனினும் இத்திட்டத்தை நாம் இரகசியமாக வைத்திருந்தோம் தற்போது இதற்கு அதிக வரவேற்பு கிடைத்துள்ளது." எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரமிக்க வைக்கும் களிமண் வீடு

Octavio Mendoza எனும் 64 வயதான கட்டிடக்கலை நிபுணர் சுமார் 5,400 சதுர அடிகள் கொண்ட பிரமிக்க வைக்கும் களிமண் வீடு ஒன்றினை உருவாக்கியுள்ளார்.

கொலம்பியாவில் அமைக்கப்பட்டுள்ள இவ்வீடானது குறித்த கட்டிடக்கலை நிபுணரின் 14 வருட உழைப்பில் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.



## பிரிட்டனின் வயது குறைந்த பெற்றோர்! தாய்க்கு 12, தந்தைக்கு 13

பிரிட்டனில் மிக குறைந்த வயதில் 12 வயது பெண்ணும், 13 வயது ஆணும் தாய்- தந்தை ஆகியுள்ளனர்.

பிரிட்டனில் மிக குறைந்த வயதில் அதாவது மாணவர் பருவத்தையே தாண்டாத இருவர் பெற்றோர் ஆகியுள்ளனர்.

இவர்களது பெயர் வெளியிடப்படவில்லை, கடந்த 2012ம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி இவ்விருவரும் சந்தித்து கொண்டனர். சிறுமிக்கு அப்பொழுது வயது 10, சிறுவனுக்கு வயது 12. இவர்கள் இருவரும் ஒரு வருடமாக சந்தித்து தங்களது காதலை வளர்த்துள்ளனர்.

அதன் பின்னர் அந்த சிறுமி தனது 11வது வயதில் கர்ப்பிணியாகி உள்ளார். கடந்த வாரம் பெண் குழந்தைக்கு தாயான அந்த சிறுமி தனது தாய் மற்றும் மற்றொரு பெண்ணுடன் சென்று பதிவாளர் அலுவலகத்தில் குழந்தை பிறப்பை பதிவு செய்துள்ளார்.


தினப்புயலில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியுடையவர்கள் தேவை

உதவி ஆசிரியர்கள்
விளம்பர சேகரிப்பாளர்கள்
விற்பனை பிரதிநிதிகள்
கணனியில் பின்வரும் தகுதியுடையோர்.
* Pagr Maker, * Phhoto Shop, * Internet

உடனடியாக சுயவிபர கோவையுடன் நேரில் வரவும்.

தெ.பே.0711850885
0242227558

இல-154.ம் ஒழுங்கை.
தேக்கவத்தை.வவுனியா.





















email : vanni_inn@yahoo.com

Vanni Inn

Chinese, Indian, Sri Lankan Food available



HOTEL VANNI INN



A/C Room, Non A/C Room, Com Room
Quality Foods, Hall, Vachel Parking

2nd Cross Street, Vavuniya.

Tel : 024 2222074 , Fax : 024 2222074


இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 27.04.2014 அன்று வெளியிடப்பட்டது.